அன்பின் ஒளி

தொகுப்பு :

திருவடி தாசன்

வெளியிடுவோர் :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்
இலக்கியப் பதிப்பகம்
32, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, சென்னை-1.

வேண்டுகோள்

பதிப்பக உறுப்பினர்கள் ஒவ்வோராண்டும் மார்ச் மாதத்திற்குள் சந்தா செலுத்திவிடும்படி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாண்டிற்கான சந்தா செலுத்தாத உறுப்பினர்கள் உடனே சந்தா செலுத்தக் கோருகிறோம். அருகாமையிலுள்ள அடியார் அன்பர்களையும் நமது பதிப்பகத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துப் பதிப்பகச் செயல்களுக்கு ஊக்கமளிக்கக் கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வோராண்டும் பதிப்பகம் வெளியிடும் ஆண்டு மலர் வந்து சேராத உறுப்பினர் பதிப்பகத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கோரலாகிறது.

அடிக்கடி [வாரமொரு முறை] ரேடியோவில் சென்னை-1 அலைவரிசையில் காலை 6-05 முதல் 6-30 வரை ஒலிபரப்பப் பெறும் துதிப்பாடல் நிகழ்ச்சியில், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட்பாடல்கள் ஒலிபரப்பப் பெறுகின்றன. விருப்பமுடைய அடியார் அன்பர்கள் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து, "The Station Director, All India Radio, Beach Road, Mylapore Madras-4" [ஆல் இந்தியா ரேடியோ நிலைய அதிகாரி, மயிலாப்பூர், சென்னை-4] என்ற முகவரிக்குத் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும்.

இங்ஙனம்,

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்
இலக்கியப் பதிப்பகம் (Regd.)
32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை-600 001

வெளியீடு எண் : 11

ஸ்ரீ குரு அருள் துணை

அன்பின் ஒளி

கோவை. அருள்திரு G. V. முத்துசாமி செட்டியார் அவர்களின்

நினைவு மலர்

★

தொகுப்பு :

திருவடி தாசன்

★

22—9—1975-ல், புரட்டாசி இரேவதி நன்னாளில்
இரெட்டியப்பட்டியில், சுவாமிகளின் ஜயந்தி விழாவில்
வெளியிடப்பெற்றது.

★

வெளியிடுவோர் :

ஸ்ரீ இரெட்[illegible]ப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்
32, கோவிந்[illegible]ாயக்கன் வீதி, சென்னை-1. (தொலைபேசி : 34600)

பிள்ளையார் குப்பம்

உயர்தவத்திரு அருள்சக்தி அன்னையார் அவர்களின்


அருளுரை

உலக உயிர்கள் எளிது கடைப்பிடித்து, இம்மை மறுமை நலங்களை அடைய, குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வகுத்து வழங்கியுள்ள அருட்சட்டத்தைக் கடைப்பிடித்து, பிணி நீங்கி, அருள் வாழ்வு வாழ்ந்த கோவை—திரு. முத்துசாமி செட்டியாரின் நினைவாக வெளிவரும் இந்நூல், அடியார்களும், அன்பர்களும் வாசித்துப் போற்றற்குரியது.

சிறந்த அடியார்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது அடியார்களின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியும்.

அவரான்மா பரிபூரண இன்பம் பெறவும், அவருடைய திருக்குடும்பமும், திருமரபும் எல்லா நலமும் பெற்று விளங்கவும் எல்லாம் வல்ல ஆண்டவர் அருள்புரிவாராக.

திருவருள்—ஸ்ரீ சக்தி தாய்



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

ஓம்

இந்நூல் வெளியிடப் பொருளுதவி புரிந்தவர்கள்

		ரூ.
சேலம் திரு. M. ஹரிகிருஷ்ணன்	...	151
கரூர் திரு. M. கருணாகரன்	...	151
சேலம் திரு. K. பஞ்சநாதம் செட்டியார்	...	151
கோவை திரு. G. P. மோகனராஜ்	...	101
சேலம் திரு S. V. N. சுப்ரமண்யம் & பிரதர்	...	51
கோவை திரு. S. V. நாகசுப்ரமண்யம் செட்டியார்	...	50
,, திரு. E. S. ராதாகிருஷ்ண செட்டியார்	...	50
ஆட்டையாம்பட்டி திரு. பெத்தண்ணன்	...	25
ஏத்தாப்பூர் அபிநவம் திரு. M. செல்வகுரு	...	25
,, ,, திரு. சுப்ரமண்ய செட்டியார்	...	25
கோவை திரு. S. கனகராஜு செட்டியார்	...	15
ஆட்டையாம்பட்டி திரு. P. நவநீதம் செட்டியார்	...	11
சேலம் திரு. C. V. ராமச்சந்திர செட்டியார்	...	11
ஏத்தாப்பூர் அபிநவம் திரு. A. R. அப்பர்	...	11
கரூர் திரு. P. R. குப்பண்ண செட்டியார்	...	11
சென்னை திரு. T. ஜெகநாதகுப்தா	...	11
சேலம் திரு. K. சாரங்கபாணி செட்டியார்	...	11
ஏத்தாப்பூர் திரு. S. V. பத்மநாபன்	...	10
,, ,, K. M. முத்துகிருஷ்ணன்	...	10
கோவை திரு. R. இராமலிங்கம் B.A.	...	10
மன்னார்பாளையம் திரு. R. விஜயரங்கம்	...	6
புதுப்பட்டி திரு. P. K. பெரியசாமி	...	6
ஏத்தாப்பூர் அபிநவம் திரு. சின்னு படையாச்சி	...	5
வேடிச்சிபாளையம் திரு. P. பண்டரிநாதன்	...	5
ராசிபுரம் திரு. B. வாசுதேவன்	...	5
ராயக்கோட்டை திரு. J. V. ராமன்	...	5
சேலம் திரு. C. N. ராதாகிருஷ்ண செட்டியார்	...	3
வரவு ரூ.		926

முன்பக்கப்படி வரவு	ரூ.	...	926
விளம்பர மூலம் வரவு			
கோவை M/s. ராம்ராஜ் டிரேடிங் கம்பெனி		...	200
,, M/s. கோபால் கேம்ஃபர் ஒர்க்ஸ்		...	101
சென்னை திரு. T. ஜெகநாத குப்தா மூலம் வட்டி வரவு		...	100
ஆக வரவு	ரூ.	...	1,327
இந்நூல் அச்சிடச் செலவு	ரூ.	...	1,327

CERTIFICATE OF REGISTRATION OF SOCIETIES' ACT XXI OF 1860.

S. No. 73 of 1973

I hereby certify that SRI REDDIAPPATTI SWAMIGAL ILAKKIYA PATHIPPAHAM, has this day been registered under the Societies' Registration Act XXI of 1860

Given under my hand at MADRAS., this 14th day of March One thousand nine hundred and Seventythree.

Seal
of the
Registrar
of Madras
14—3—1973

(Sd). E. DEENADAYALAN
Registrar of Madras District

(True Copy)



அருள்திரு G. V. முத்துசாமி செட்டியார்
அவர்கள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

அன்பின் ஒளி

பூவுலகில் உள்ள புண்ணியத் தலங்கள் பலவற்றுள், நினைக்க முத்திதரும் திருவண்ணுமலை சிறப்பு மிக உடையது. அது எனக்கு மாமியார் ஊராக அமைந்ததால், அடிக்கடி அங்கு செல்லும் வாய்ப்பு திருவருளால் கிடைத்தது. அவ்வாறு ஒருமுறை 1941-ல் அங்கு சென்றிருந்தபோது தேசிய சமூக நலப் பொதுப் பணிகளில் ஊக்கம் மிகவும் கொண்டவரான ஆரிய வைசிய சமாஜச் செயலர் திரு. M. ஸ்ரீ ராமுலு செட்டியார் அவர்களும், தலைவர் திரு. P. S. M. தீர்த்தகிரி செட்டியார் அவர்களும், சமாஜத்தின் ஆண்டு விழா இரண்டொரு நாட்களில் நடைபெறப்போவதாகவும், அவ்வமயம் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வரும் சேலம் உயர்திரு. M. V. கோபால் செட்டியார் அவர்களும், திண்டுக்கல் உயர்திரு. K. V. முத்துகிருஷ்ண செட்டியார் அவர்களும் வருகை புரிவதாகவும், அவ்விரு தலைவர்களுக்கும் வரவேற்பு இதழ் வாசித்துத் தரவேண்டும் என்றும், அவற்றை நான் எழுதித்தர வேண்டும் என்றும் கூறி என்னைத் தங்குமாறு வற்புறுத்தினர்கள்.

விழாச் சமயத்தில், கவிதையில் எழுதப்பெற்ற அவ்வரவேற்பு இதழ்களை வாசித்தளிக்கவும் பணித்தனர். வாசிக்கக் கேட்ட உயர்திரு. M. V. கோபால் செட்டியார் அகமிக மகிழ்ந்தவராய், ஆரிய வைசிய குலதெய்வமான ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரியின் வரலாறு நூல் வடிவில் எழுத வேண்டும் என்று கூறிச் சேலத்திற்கு வருமாறு பணித்தனர்.

அந்த அன்புக் கட்டளைக்கும், திருவண்ணுமலை திரு. M. ஸ்ரீ ராமுலு செட்டியார், திரு. P. S. M. தீர்த்தகிரி செட்டியார் ஆகிய இருவரின் திருக்கருத்துக்கும் இசைந்து,

சேலம் சென்றபோது, திரு. M. V. கோபால் செட்டியார் அவர்கள் மிக்க ஆர்வத்துடன் வரவேற்று, உபசரித்து அளவளாவிய பின், கோயம்புத்தூரிலிருந்து இந்துபுரம் சென்று திரும்புகையில் சேலத்தில் இறங்கி வைசியா மாடர்ன் ஹோட்டல் உரிமையாளர் திரு. பஞ்சநாதம் செட்டியார் அவர்களின் இல்லத்தில் தங்கியுள்ள தம் குருவான உபய பாஷா ப்ரவீண-பண்டிதராய-ஸ்ரீமான் கிரந்தி வேங்கட கோபால செட்டியார் அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினர். அறிமுகம் ஆனபின், ஒருவரோடொருவர் உளம் கலந்து பேசியதில் இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லேயே இல்லே.

அறிமுகம்

அவ்வாறு பழகிக்கொண்டிருக்கையில், அவருடைய திருக்குமாரரான நம் திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்கள் தம் மாமியார் அகத்திற்கு வந்தனர். அதாவது திரு. K. பஞ்சநாதம் செட்டியார் அவர்களின் தங்கை திருமதி. சரசுவதி அம்மையாரை திரு. முத்துசாமி செட்டியார் அவர்கள் இரண்டாம் தாரமாக மணந்து கொண்டிருந்தனர். மாமியார் அகத்திற்கு வந்த மாப்பிள்ளேயுடன் பழகியபோது, எப்படியோ, இருவரும் ஈருடலும் ஒருயிரும் போல், அல்வளவு உளம் கலந்த நட்புடையவர்களாகி விட்டோம்,

இரண்டொருநாள் தங்கியிருந்துவிட்டு அவர்கோவைக்குப் புறப்படும்பொழுது, அப்பிரிவைத் தாங்க முடியாது இருவரும் அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லே. அவர் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு முழுவதும் இருவரும் உறக்கமே இன்றி அழுத வண்ணமே இருந்தோம். மறுநாள் அவர் கோவைக்குப் புறப்பட்டுச் செல்கையில். அவசியம் வீட்டிற்கு வரவேண்டும் எனக் கூறிச் சென்றனர்.

பெற்ருேர் சிறப்பு

இவருடைய தந்தையார் உயர்திரு. வேங்கட கோபால செட்டியார் அவர்கள் முறைப்படி வேத அத்யயனம் செய்

தவர். வேதங்களையும் வேத அங்கங்களையும் நன்கு உணர்ந்தவர். உபநிஷத், கீதை, பிரம்ம சூத்திரம் ஆகிய அனைத்திலும் தேர்ந்தவர். ஆந்திரம், ஆங்கிலம், பைந்தமிழ், ஹிந்தி, மலையாளம், கன்னடம், உருது, லத்தீன், பர்மிய மொழி முதலிய பல மொழிகளை இலக்கணத்துடன் பயின்று தேர்ந்தவர். அநேக மொழிகளில் அற்புதமான கவிதைகள் இயற்றும் வல்லமையும் பெற்றிருந்தவர். இசைப்பயிற்சி, வியாயாமம், பிராணயாமம், யோகாப்பியாசம் முதலிய அனைத்திலும் வல்லமை வாய்ந்தவர். ஆசாரசீலம், அனுஷ்டானம், தெய்வ பக்தி, ஆத்ம ஞானம் முதலிய அனைத்திலும் சிறந்தவர். அரசினர் நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிந்தவர். மகா மேதையான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஆத்மூரி லக்ஷ்மீ நரசிம்ம சோமயாஜுலு, B.A., B.L., அவர்களுடன் கலந்து பல நாட்கள் சமூக சேவை புரிந்தவர். 1924-ல் குண்டூரில் நடந்த அகில இந்திய ஆரிய வைசிய மகாநாட்டுக்குத் தலைமை வகித்து இனிது நடத்தியவர். நல்ல பல நூல்கள் இயற்றியவர்.

தோற்றம்

இவருடைய வாழ்வரசியாராக அமையும் பேறு பெற்றவர் திருமதி சுப்புலக்ஷ்மி அம்மையார் ஆவர். இவர்களுக்குக் குமாரராக 9-11-1898-ல் திரு. முத்துசாமி செட்டியார் தோன்றினர். முத்து என்பது நவரத்தினங்களில் ஒன்றாகும். வைரத்திற்கு பட்டை தீட்டுவதுபோல இதற்குப் பட்டை தீட்ட வேண்டிய அவசியம் இல்லை. இது இயற்கையாகவே ஒளியுடையதாகும். ஒளி வீசும் குணம் இதனிடத்திலிருப்பினும், வைரம்போல ஆடம்பரமின்றி, அடக்கமாகவும், அமைதியாகவும் திகழும். 'முத்து' என்று தெலுங்கில் சொன்னால் முத்தமிடுவதைக் குறிக்கும். 'முத்தம்' என்றாலும் 'முத்து' என்றாலும் தமிழில் நவரத்னங்களில் ஒன்றான முத்தைக் குறிக்கும். இவருடைய சிறந்த குணங்களை உணர்ந்தவர்கள், இவரை முத்தமிட்டு மகிழக்கூடிய பண்பாடோடே விளங்கினர். 'சாமி' என்பதும் 'சுவாமி' என்பதும் ஒன்றே. அச்சொல், எல்லாம் வல்ல இறைவனைக் குறிக்கும். 'ஸ்வம்'

என்ருல் சொத்து என்று பொருள். எல்லா உலகங்களேயும் தன் உடமையாக உடையவன் ஆதலால் இறைவனே 'ஸ்வாமி' என்று அழைக்கிருேம். இறைவழிபாட்டிலும், அருள் நெறியிலும் உயர்ந்த இவரைப் பிற்காலத்தில் 'ஸ்வாமி' என அழைத்துப் போற்றத் தக்க அவ்வளவு உயர் நிலையை இவர் அடைந்து திகழ்ந்தனர் என்பது இவரது வரலாற்றின் பிற்பகுதியில் நன்கு காணலாம்.

கல்வி

இவர் தம் தந்தையாரைப் போல், பன்மொழிப் பயிற்சி பெற்றிராவிடினும், ஆந்திரம், ஸம்ஸ்க்ருதம், கன்னடம், மலேயாளம், ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிகளில் பேசவும் எழுதவும் நூல்கள் படிக்கவும் பயின்றிருந்தார். அடக்கம், பணிவு, இன்சொல், பெரியோர்பால் மரியாதை முதலிய குணப்பண்பில் இவர் தந்தைக்கேற்ற தனயனுய் விளங்கினுர். இவர் இளமையில் 'ஸ்கூல் பைனல்' (School Final) வரை படித்திருந்தார்.

வாழ்க்கை

இவருக்கு ரத்னம்மாள், கோகிலாம்பாள், சுந்தரம்மாள் ஆகிய மூன்று தமக்கையர் இருந்தனர். இவர்கள் எந்நேரமும் ஸ்லோகங்கள் பல பாராயணம் செய்து கொண்டிருப்பர். திருமதி. இரத்னம்மாள் அவர்களின் கணவர் பெயர் திரு. பரசுராம செட்டியார். இவர்கட்கு பாலவெங்கடராமன், தியாகராஜ், மோகன்ராஜ் என்ற மூன்று ஆண்பிள்ளேகளும், செல்லம்மாள், சூரியகாந்தம் என்ற இரு பெண்பிள்ளேகளும் உண்டு. திருமதி. சுந்தரம்மாள் அவர்கள் ராசீபுரத்தில் திரு. பாலகிருஷ்ண செட்டியார் என்பவருக்கு வாழ்க்கைத் துணேவியாகி புத்திர பௌத்ராதிகளுடன் திகழலாயினர்.

திரு. முத்துசாமி அவர்களின் இளம் வயதிலேயே தாயார் இறைவனடியடைந்தனர். சிற்றன்னேயார் திருமதி. பாக்ய லக்ஷ்மி அம்மையார் மைசூரில் திவானுக்கு உதவியாக இருந்தவர்க்கு வாழ்க்கைப்பட்டு, விதந்துவாகி இருந்தவர், தமக்கையார் காலமானதறிந்து தமக்கையின் பிள்ளேகட்கு ஆதர

வாக இருக்கலாம் எனக்கருதிக் கோவைக்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் தாம் இவரைப் பிரியமுடன் வளர்க்கலாயினர்.

இவருக்கு 1923-ல் திருமணம் நடந்தது. ஆனைமலை திரு. பாலகுருமூர்த்தி செட்டியார், திருமதி ஆதிலக்ஷ்மி அம்மையார் ஆகிய இருவரின் திருமகளாரான திருமதி. யசோதையம்மாள் இவருக்கு வாழ்க்கைத் துணைவியாய் அமைந்தனர். இல்லறம் இனிதே நடந்து வந்தது. செல்வி பாரதா தேவி என்ற பெண்மகவும், செல்வர்கள் ஹரிகிருஷ்ணன், கருணாகரன் என்னும் இரு ஆண்மக்களும் தோன்றிய பின், திருமதி. யசோதையம்மாள் (1939) பிரமாதி ஆண்டு ஆடி மாதத்தில் இறைவனடி அடைந்தனர்.

பிறகு (1940-ல்) விக்ரம ஆண்டு வைகாசி மாதத்தில் இவருக்கு இரண்டாவது திருமணம் நடைபெற்றது. சேலமா நகரில், வாளவாடி திரு. கிருஷ்ண செட்டியார் திருமதி. வாசவாம்பாள் ஆகியோரின் திருமகளாரும், வைஸ்யா மாடர்ன் ஹோட்டல் உரிமையாளர் திரு. K. பஞ்சநாதம் செட்டியார் அவர்களின் தங்கையுமாகிய திருமதி. சரசுவதி அம்மையார் அவர்கள் இவருக்கு இரண்டாம் தாரமாய் அமைந்தனர்.

இவ்வம்மையாருக்கு இரண்டு தமக்கையரும், ஒரு தமையனும் உண்டு. மூத்த தமக்கையரான திருமதி. கமலம் அம்மாள் பாலக்காடு திரு. S. V. நஞ்சப்ப செட்டியார் அவர்களை மணந்துகொண்டு, செல்வியர் நாகரத்தினம், கஸ்தூரிபாய், நீலாவதி என்னும் பெண்மக்களையும், சுப்பிரமணியம், கிருஷ்ணன் என்னும் ஆண்மக்களையும் ஈன்று சேலமா நகருக்கு வந்து நல்ல முறையில் வாழ்வாற்றி வருகின்றனர். அடுத்த தமக்கையரான திருமதி. ராதா லக்ஷ்மியம்மாள், சேலம் மாவட்டம் ஏத்தாப்பூர் திரு. சுப்ரமணியம் செட்டியார் அவர்கட்கு வாழ்க்கைத் துணைவியாகி நல்ல முறையில் இல்லறம் நடத்தி வருகின்றனர். தமையனுரான திரு. K. பஞ்சநாதம் செட்டியார் அவர்கள் காடையாம் பேட்டை ஓய்வு பெற்ற போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் திரு. சாமி செட்டியார் அவர்களின் திருமகளார் நீலாவதி அம்மையாரை மணந்து செல்வர்கள் ஜெயகுமார், ராம்குமார், கிருஷ்ணகுமார் என்னும் ஆண்மக்களையும், கமலேஷ் குமாரி என்னும்

பெண் மகவையும் ஈன்று நல்ல முறையில் இல்லறம் நடத்தி வருகின்றனர்.

தொடர்பு

1942-ல் கோவை மாநகர் செல்லும் வாய்ப்பு திருவருளால் கிடைத்தது ஏற்கனவே இவரும் இவரது தந்தையாரும் தமது இல்லத்திற்கு வரவேண்டும் என வற்புறுத்தி அழைத்திருந்ததால், நேராக இவர்கள் இல்லத்திற்கே சென்று இறங்கியதும், இவர்கள் மிக்க அன்புடன் வரவேற்று உபசரித்த சிறப்பு அளவுகடந்ததாகும். தொடர்ந்து சில நாள் பழகியதும், அக்குடும்பத்துள் ஒரு பிள்ளையாகவே பழகும்படியாக அவ்வளவு அந்நியோந்நியத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இந்நாள்வரை அக்குடும்பத்தார் அனைவரும் கொண்டு பேணிவரும் அன்பும் ஆர்வமும் ஏட்டிலும் எழுத்திலும் அடங்குவன ஆகா.

அருட்சட்டம் ஏற்கக் காரணம்

அடியேன் கோவை சென்று இவர்கள் இல்லத்தில் தங்கியபோது இவருக்குக் காசநோய் (ஆஸ்த்மா) இருந்து வந்தது. அதனால் இவர் சொல்லொணாத் துயரடைந்தார். அப்போது இவர் கோவை R. S. புரத்திலுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் பாங்கில் நகை மதிப்பினராகப் பணிபுரிந்து வந்தார். பணியைச் சரியாகச் செய்யவிடாதபடி நோய் இவரை மிகவும் வாட்டியது. அதனால் இவர் கோவை, சேலம் முதலிய இடங்களில் வைத்தியம் செய்துகொள்ள முயன்றார். ஆயுர்வேதம், ஆங்கில வைத்தியம், (மலையாள) முண்ட வைத்தியம் ஹோமியோபதி முறை, சித்த வைத்தியம், யுனானி முறை முதலிய எல்லா முறைகளிலும் ஒவ்வொன்றிலும் பல மாதங்கள் ஈடுபட்டு மருந்துகள் அருந்தியும், பலமுறை அலுவலகத்தில் விடுமுறை பெற்றுக்கொண்டு வருந்தியும் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. அளவு கடந்து பலவிதமான மருந்துகளை மாதக்கணக்கில் மாறிமாறி அருந்தியதாலும், பலவகையான பத்தியங்களை மேற்கொண்டதனாலும் உடம்பில் அளவுகடந்த உஷ்ணம் உண்டாகி மூன்று வகையான

காமாலே நோய்க்கு உள்ளானுர். காமாலேயைக் குணப்படுத்திஞல் காசநோய் தோன்றுகிறது. காசநோய்க்கு மருந்தருந்திஞல் காமாலே வருகிறது இப்படிச் சொல்லமுடியாத சிரமத்துக்குள்ளாகி மனம் மிகவும் வருத்த முற்ற இவர், மருந்துகள் பல அருந்தி அருந்திச் சலித்துவிட்ட மையால், 'இனி என்னவாஞலும் சரி; மருந்தே அருந்துவ தில்லே' ஏன்று பிரதிக்ஞை செய்துகொண்டார்.

இவருக்கு ப்ராணுயாமம் செய்யத் தெரியும். அம்முறை யில் ஓரிடத்துட்கார்ந்து ஒருமணி நேரம் ப்ராணுயாமம் செய்தால், பிறகு சில மணிநேரம் காசநோயின் கடுமை குறைந்திருக்கும். மீண்டும் தோன்றி சிரமப்படுத்தும். உடனே இவர் ப்ராணுயாமம் தொடங்க வேண்டியதுதான். பகலில் எந்த வேலேயும் செய்ய முடியாமலும், இரவில் சிறிதும் உறங்க முடியாமலும் மிகவும் வருத்தமுறலானுர்.

இவர் தினந்தோறும் அலுவலகத்திலிருந்து வந்ததும். கொஞ்சதூரம் நடந்து (walking) சென்று வருவது வழக்கம் ஒரு நாள் அவ்வாறு செல்லும்போது, இவருடைய தந்தையா ருடன் பேசிக்கொண்டிருந்த அடியேனேயும் உடன்வருமாறு அழைத்தனர். அவ்வாறு நடந்துசென்று கொண்டிருக்கையில் தனக்கு உள்ள நோயின் நிலேமையையும், ஆண்டுக் கணக்கில் பலவிதமான வைத்தியங்கள் செய்துபார்த்தும், ஆயிரக்கணக் கில் பணம் செலவு செய்தும், நோய் தீர்ந்தபாடின்றி, இவ் வாறு சிரமம் தருவதையும், மருந்து அருந்தி அருந்திச் சலித்து விட்டமையால், 'மருந்தே இனிப் பயன்படுத்துவதில்லே' என உறுதி செய்துகொண்டதையும் கூறி "மருந்தே இல்லாமல் நோய் தீர்த்துக்கொள்ள மார்க்கம் ஏதேனும் உண்டா" என்று கேட்டனர்.

இவர் இந்தக் கேள்வியைக் கேட்டதும் அடியேனுக்கு ஒரு விஷயம் நினேவுக்கு வந்தது. அதாவது எங்கள் கிராம மாகிய ஆனத்தூரில் திரு. சேஷாசல ரெட்டியார் என்ற என் நண்பர் ஒருவர் "ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சட்டம்" என்ற அருள் நெறியில் ஈடுபட்டிருந்தார். அந்நெறியில் ஈடுபடுவோர் மருந்து ஏதும் பயன்படுத்துவதில்லே. அருள் துணேகொண்டே நோய்களேத் தீர்த்துக் கொள்வார்கள். இவ்விஷயம் நினே

வுக்கு வரவே, இந்த விவரங்களை இவரிடம் கூறினேன். 'அது பற்றிய புத்தகம் ஏதேனும் உள்ளதா?' எனக் கேட்டனர். சுவமிகளின் வரலாறும், சட்டநெறி சம்பந்தமான விவரங்களும் 1937-ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற புத்தகத்தை நண்பர் திரு. சேஷாசல ரெட்டியார் அவர்கள் ஏற்கனவே காண்பித்துப் படிக்கச் சொன்னது நினைவிற்கு வரவே, 'அதுபற்றிய நூல் ஒன்று அச்சாகியுள்ளது' என்றேன். 'அப்படியானால் அப்புத்தகம் ஒன்றைத் தருவித்துத் தர வேண்டும்' என்றனர். ஊருக்குச் செல்லும்போது விசாரித்துப் புத்தகம் கிடைத்தால் கொண்டுவந்து தருவதாக ஒப்புக் கொண்டேன்.

சில தினங்கள் கழித்து எங்கள் கிராமமாகிய ஆனத்தூருக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது நண்பர் திரு. சேஷாசல ரெட்டியார் அவர்களைக் கண்டு எல்லா விவரமும் கூறி அந்தப் புத்தகம் வேண்டும் என்றேன். உயர்திரு. நரசிம்மலு நாயுடு அவர்களால் வெளியிடப்பெற்ற 'வழிகாட்டும் வான்பொருள்' என்ற அந்நூல் அச்சிட்ட பிரதிகள் தீர்ந்துவிட்டமையால், இனி எங்கும் வாங்க இயலாதென்றும், புதிதாக ஒரு அன்பர் அருட் சட்டநெறியில் ஈடுபட்டு உய்திபெற வேண்டும் என்ற பேரார்வத்துடன் கேட்கின்ற இத்தகைய சந்தர்ப்பத்திற்கு உதவ வேண்டியது மிகவும் அவசியம் என்றும் கூறித் தம்மிடமிருந்த ஒரு புத்தகத்தைத் தந்து, 'இந்நூலைப் படித்துப் பார்த்துச் சட்ட நெறியில் சேர்ந்து, அவர் நோய் தீர்ந்து, குணமடைந்து, நலம் பெறவேண்டும்; அவர் மூலமாகக் கோவையிலும் சுற்றுப் புறங்களிலும் சட்டநெறி பரவிப் பலருக்கும் பயன்தர வேண்டும்' என்று பிரார்த்தித்த வண்ணம் அருளாசிகளும் அருளினர்.

அருட்சட்டம் ஏற்றமை

1943-ல் பிப்ரவரி மாதத்தில் கோவை சென்று "வழிகாட்டும் வான்பொருள்" என்ற அந்நூலை இவரிடம் கொடுத்துவிட்டு, உடுமலைப்பேட்டையில் திரு. T. V. ராதாகிருஷ்ண செட்டியார் அவர்களின் கோபால் மின் இயக்க அச்சகத்தில் 'ஸ்ரீ வாசவி விஜயம்' என்ற நூலை அச்சிட எற்பாடு செய்யப்

பெற்றிருந்ததால், உடுமலைப் பேட்டைக்குச் சென்று விட்டேன். அங்கு தங்கியிருந்தபோது, இவரிடமிருந்து ஒருநாள் ஒரு கடிதம் வந்தது. நூலைப் படித்துப் பார்த்ததாகவும் மிகவும் பிடித்திருந்ததால், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்சட்ட அநுஷ்டானம் ஏற்றுக்கொண்டதாகவும், சுவாமிகளின் திருவருளால் நோய் பற்றற நீங்கி முழுநலம் ஏற்பட்டுள்ளதாகவும், மற்ற விபரங்கள் நேரில் பேசலாம் என்றும் எழுதியிருந்தனர். அக்கடிதம் கண்டதும் திருவருட் செயலை உன்னிப்போற்றி உளமகிழ்வுற்றேன்.

நோய் தீர்ந்த அதிசயம்

பிறகு இரண்டொரு நாட்களில் கோவை வந்து இவரைச் சந்தித்தபோது, எல்லா விவரமும் தெளிவாகக் கூறினர். அதாவது, நோயின் துன்பம் அதிகமாயிருந்ததால் அது தீர்வதற்கு ஏதேனும் வழி விரைவில் கிடைக்காதோ என்று ஏங்கிக் கொண்டிருந்த இவருக்கு இப்புத்தகம் கிடைத்ததால், பாங்குக்குப் பணிபுரியச் செல்கையில் இப்புத்தகத்தை எடுத்துச் சென்றார். ஓய்வு கிடைத்தபோது புத்தகத்தைக் கையில் எடுத்துத் திறந்தார். "சுவாமிகளது சட்டமும் சுகம்பெறு திட்டமும்" என்ற தலைப்புடன் தொடங்கும் 58-வது பக்கம் திருவருளால் கிடைத்தது. உடனே அந்தப் பக்கத்திலிருந்து தொடர்ந்து வரலாறு பூர்த்தியாகும் 157-வது பக்கம்வரை படித்து முடித்துவிட்டு, பிறகு சுவாமிகள் அவதாரம் முதலிய விவரங்கள் உள்ள 1 முதல் 57 பக்கம்வரை உள்ள பகுதியைப் படித்தார். இவ்வாறு இந்நூல் முழுவதும் படித்து முடிக்க இரண்டு மூன்று தினங்களாயின. சட்டத்தைப் பற்றிய பகுதியைப் படித்ததுமே, இவருக்கு அதிலுள்ள எல்லா அம்சங்களும் மிகமிகப் பிடித்தமானவைகளாய்த் தோன்றியதால், நாமும் இந்தச் சட்டத்தில் சேர்ந்து கொள்ளலாமே என்ற எண்ணம் தீவிரமாகத் தோன்றியது.

பாங்க் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும், தம் தந்தையாராகிய திருமிகு. வேங்கட கோபால செட்டியார் அவர்களிடம் விவரங்களைக் கூறி, உடனே சட்ட நெறியை

மேற்கொண்டு, விநாயகர் வழிபாடு தொடங்க வேண்டும் என்று கருதுவதாய்க் கூறினர். அவரும் அதற்கு இசைந்தவராகி, அடுத்த நாளே வெள்ளிக்கிழமையாகவும் நல்ல நாளாகவும் இருப்பதால், மறுநாளே தொடங்குமாறு கூறி, இவரது வலது கையின் (உள்ளங் கையும் நடுவிரலும் கூடிய உயரம்) அளவுக்கு விநாயகர் உருவம் வாங்கிவரச் சொன்னர். உடனே இவர் சென்று அவர் கூறிய அளவுப்படி உள்ள மாக்கல்லால் செய்யப் பெற்ற விநாயகர் சிலை ஒன்றை வாங்கிக் கொண்டு, வழிகாட்டும் வான்பொருள் நூலில் முதலில் உள்ள ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் திருவுருவப் படத்தை எடுத்து அதற்குக் கண்ணுடி சட்டம் அமைத்து எடுத்துக்கொண்டு, பூசைக்குரிய பொருள்கள் யாவும் வாங்கிக்கொண்டு, வீடுவந்து சேர்ந்தார். பூசைக்கு என்று ஒரு அறையை வைத்துக்கொள்வது எனத் தீர்மானித்தார்.

மறுநாள் விடியல் 4 மணிக்கு இவரும் இவரது மனைவியாரும் பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்து, சுவாமிகள் திருவுருவப் படத்தை மேற்படி பூசையறையில் ஸ்தாபனம் செய்து, மலர் சூட்டி, விநாயகர் திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்து, அலங்காரம், அர்ச்சனை, தூப, தீப நைவேத்தியங்கள் செய்து, திருநீறு தீர்த்தம் உட்கொண்டு சட்ட அனுட்டானம் உடையவர் ஆயினர். இவர்கள் நடத்திய பூஜையைக் காண, உறவினரும் நண்பர்களும் வந்து கலந்துகொண்டனர். பிறகு இவர் உணவருந்தி பாங்க் அலுவலகத்திற்குச் சென்று சேர்ந்தார்.

சட்டத்தின் பகுதியைப் படித்துச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட இவர், புத்தகத்தில் மேலும் உள்ள பகுதிகளை ஓய்வு கிடைத்தபோது படிக்கலானர். அவ்வாறு படித்துக் கொண்டிருக்கையில் திடீரென ஓர் எண்ணம் தோன்றியது. நோயின் துன்பம் சிறிதும் இன்றித் தாம் பூர்ண ஆரோக்யத்துடன் உள்ளதை உணர்ந்தார். மிகவும் ஆச்சரியம் அடைந்தார். என்னே இறைவனின் கருணை! என்று மிகவும் வியந்து போற்றினர். எப்போது நமக்கு நோய் நீங்கியது என்று சிந்திக்கலானர். காலையில் நீராடும்போதும், பூஜை செய்யும்

போதும், அலுவலகத்திற்கு வந்தபோதும், வந்த பிறகும் சிறிதும் நோயின் துன்பம் தம்மைத் தாக்கவில்லை என்பதும், நன்ருக முழு ஆரோக்யத்துடன் இருந்ததும் ஒவ்வொன்ருக நினைவுக்கு வந்தன. இரவு நன்ருக தூங்கியதும், இத்தனை நாட்கள் உறக்கமே இன்றி விடியவிடியக் கண்விழித்தும், இடையிடையேபிராணுயாமம்செய்துகொண்டும் சிரமப்பட்ட மாதிரி இன்றி, மிக நன்ருகத் தூங்கி அதிகாலையில் எழுந்ததும் நினைவுக்கு வந்தது. முதல்நாள் மாலை விநாயகர் திருவுருவச்சிலை வாங்கும்போதும், சுவாமிகள் திருவுருவப் படத்திற்குக் கண்ணுடி சட்டம் அமைத்தபோதும், பூஜைக்குரிய பொருள்களை வாங்கிவந்தபோதும், நோயின் தாக்குதல் சிறிதும் இன்றி நல்ல ஆரோக்கியத்துடன் இருந்ததும் அடுத்தபடி நினைவுக்கு வந்தது. மாலை அலுவலகத்திலிருந்து வீடு செல்லும்போதும், தந்தையாரிடம் சட்டநெறி மேற்கொள்ளக் கருதியுள்ளது பற்றிக் கூறும்போதும்கூட, நோயின் தாக்குதல் இல்லையே என்ற நினைவு அடுத்தபடி தோன்றியது. எப்போது இந்த நோய் விலகியது என்று மேலும் சிந்திக்கலாயினர்.

'வழிகாட்டும் வான்பொருள்' நூலைப் பிரித்து, சுவாமிகளது சட்டத்தைப் பற்றிப் படித்து, 'நாம் இந்தச் சட்டத்தில் சேர்ந்துகொள்வோம்' என்று மனதில் தீவிரமாகத் தீர்மானித்த உடனேயே நோய் அடியோடு நீங்கிவிட்டது என்ற உண்மையை உணர்ந்ததும், இவர் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை இறைவனது அருட்பெருங் கருணையின் சிறப்பை எண்ணி எண்ணிப் போற்றலானுர். இவர் அடைந்த நலத்தைக் கண்டதும், இவரது குடும்பத்தவர் அனைவரும் அருட்சட்டத்தில் ஈடுபடலாயினர்.

அடியேனையும் அருட்சட்டத்தில் ஈர்த்தமை

ஸ்ரீ வாசவி விஜயம் நூல் அச்சிடும் வேலை பூர்த்தியாகி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களின் ஆரிய வைசிய மகாநாடு 1944 ஜனவரியில் பழனிமா நகரில் நடந்தபோது, தக்ஷிண கண்ட ஆரிய வைசிய மகாசபையின் வெளியீடாக அரங்கேற்றம் செய்யப்பெற்றபின், நாங்கள் குடும்பத்துடன் கோவை சேர்ந்தோம்.

ஒரு நாள் இரவு இவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமி களின் திருவருளால் நடைபெறும் அற்புதங்களைப் பற்றிக் கூறியபின், "சட்டப் புத்தகத்தைத்தந்து, எங்களைச் சட்டம் எடுத்துக் கொள்ளச் சொன்னீர்களே! நீங்கள் எப்போது சட்டம் எடுத்துக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டார். 'எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்' என்றேன். அன்றை தினம் வியாழக்கிழமை. "நாளைய தினம் வெள்ளிக்கிழமை. சட்டத்தில் வெள்ளிக்கிழமை சிறப்புடைய நாளாதலால் நாளைக்கே நீங்கள் குடும்பத்துடன் சட்டம் ஏற்கலாம்' என்றனர். இக்கருத்துக்கு என் மனைவியும் இசைந்ததால், மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்குப் பச்சைத் தண்ணீரில் மூழ்கி, இவர்களது பூஜை அறைக்குச் சென்று, பூஜையிற் கலந்துகொண்டு திருநீறு தீர்த்தம் ஆகிய அருட்ப்ரஸாதங்கள் அருந்திச் சட்டத்தில் சேர்ந்துகொண்டோம். ஆண்டவன் அருளால் கோவை திரு. G. V. முத்துசாமி அவர்களின் மூலம், அடியேனும், என் மனைவி பார்வதவர்த்தனியும், 3 வயதான என் மகன் இராமலிங்கமும் அருட்சட்ட அடியவர்கள் ஆனோம். அன்று முதல் ஆண்டவர் திருவருளால் பெற்று வரும் எல்லா நலன்களுக்கும், இவ்வருட்சட்ட நெறியில் எங்களை ஈடுபடுத்திய நண்பர் திலகம் கோவை திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்களே காரணம் என்று கூறிக்கொண்டு, அவர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிறரையும் ஈடுபடுத்தியமை

நாங்கள் சட்டம் எடுத்துக்கொண்ட அதே நாளில், கோவை ஸ்ரீ A. V. கிருஷ்ணசெட்டியார் அவர்களும் குடும்பத்துடன், உயர்திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்கள் ஊக்கிய வண்ணம், அருட்சட்டம் ஏற்றனர். அருட்சட்டம் ஏற்றுச் சிலமாதம் கழித்து இவருடைய மனைவியார் ருக்மணி அம்மாள் கர்ப்பவதியாயினர். சட்ட நெறியில் பிரஸவம் ஆதலால், அவ்வமயம் இவருடைய இல்லத்திலேயே பிரஸவத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆண்டவர் அருளால் ஆண் மகவு பிறந்தது. ஆண்டவர் நிகழ்த்தும் அருளற்புதங்கள்

பலவற்றுள் ஒன்றை அப்போது அம்மகவின் மூலம் காண லானேம். விடியற்காலே மணி மூன்று ஆனபிறகு, அச்சேய் தாயிடம் பால் அருந்துவதில்லே. தாயும் சேயும் நீராடியபின் தான், தாயிடம் பால் அருந்தும். ஆண்டவர் அருள் நிகழ்த்தும் இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் வியந்தனர். எந்தவித மருந்தும் எள்ளளவும் பயன்படுத்தாது, தாயும் சேயும் சட்ட நெறிப்படியே நன்கு பேணப்பெற்றனர்.

நம் உழுவலன்பர் உயர்திரு. முத்துசாமி அவர்கள் இல்லத்தில் ஆண்டவர் அருட்சட்டத்தால் ஏற்படும் நலன் களேக் கண்கூடாகக் கண்ட பலர் இவரிடம் வந்து திருநீறு தீர்த்தம் பெற்றுச் சென்று பயன்படுத்தி நோய்கள் நீங்கி நலம் அடைந்தனர். குறைகள் நீங்கிக் குதூகலித்தனர். இவர் மூலமாகச் சட்டம் ஏற்று நலம் அடைந்தவர்களும் அநேகர். கோவை திரு T. S. தாசப்ப செட்டியார் அவர் களும், திரு. T. S. சுப்புராம செட்டியார் அவர்களும் இவர் மூலம் சட்டம் ஏற்று நலமுற்றனர். திரு. T. S. சுப்புராம செட்டியார் அவர்களும் திரு. G. V. முத்துசாமி செட்டியா ரைப்போலவே ஆஸ்த்மா நோயினுல் மிகவும் துன்பப்பட்டு வந்தார். அருட்சட்ட அனுஷ்டானம் ஏற்றதும் நோய் முற்றும் நீங்கப்பெற்று, பூரண குணமடைந்தார். அதைக் கண்ணுற்ற அன்னரின் குடும்பத்தினரும் சட்ட அனுஷ்டா னத்தை மேற்கொண்டனர். திருமதி கவுரி அம்மாள் என்ற ஒரு அம்மையாரும் இவர் மூலம் சட்டம் ஏற்றுக்கொண்டு தினந்தோறும் அதிகாலே நீராடி இவரது இல்லத்திற்கு வந்து பூஜையிற் கலந்துகொள்வர்.

திருமகளும் மருமகனும்

இவருடைய திருமகள் பாரதா தேவியைச் சேலம் திரு. C. B. வரதராஜுலு செட்டியார் திருமதி. பாக்யலக்ஷ்மி அம்மையார் இவர்களின் புதல்வரான திரு. C. V. இராமச் சந்திர செட்டியாருக்குத் தருவதாகப் பேசி நிச்சயித்து ஷ திருமணம் கோவை மாநகரில் 2-6-1946-ல் இனிது நடந்தது. மணமகனர் ஆங்கில மருந்துகள் சம்பந்தமான படிப்பு படித்

திருந்ததால், அவர் சேலத்தில் மருந்து வியாபாரம் தொடங்கினர். மனைவிக்கு ஏதேனும் சிறிதளவு உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும் அவர் மருந்து அருந்த வேண்டும் என வற்புறுத்தலானர். அருட் சட்ட நெறியில் தோய்ந்திருந்த செல்வி பாரதாதேவிக்கு மருந்து அருந்தச் சம்மதம் இல்லை. இவ்வாறு இருவர்க்கிடையும் கருத்து வேறுபாடு இருந்ததால், வருத்தம் மிகவுற்ற செல்விக்கு மனநோய் தோன்றியது. ஆண்டவர் திருவருள் இவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படத் துணைபுரிந்தது. திரு. இராமச்சந்திர செட்டியாருக்குக் காலில் ஒரு புண் வந்தது அது எந்த வைத்தியத்திலும் குணப்படாது நீடித்தது. பிறகு ஆண்டவர் திருநெறியில் ஈடுபட்டதும், திருநீறு தீர்த்தத்தினல் வெகுவிரைவில் குணமாயிற்று. அதிலிருந்து அவர் அருட் சட்டத்தினை வெகு தீவிரமாகப் பின்பற்றலாயினர். செல்வி பாரதாதேவிக்கும் மனம் சரியாகிவிட்டது. அவர்கள் இருவரும் அருள் வாழ்வு ஆற்றிவருகின்றனர். சூர்யகுமாரி சுபாஷிணி என்ற இரு பெண்மக்களையும், சந்திரசேகரன் என்ற ஆண் மகனையும் ஈன்று ஆண்டவர் திருவருளால் நன்கு இல்லறம் நடத்தி வருகின்றனர்.

தொழில்

அடியேனும், திரு. G. V. M. அவர்களும், கோவை திரு. R. இராமலிங்கம், B. A., அவர்களும் சேர்ந்து 1945-ல் 'பாஸ்கரா பப்ளிசிடி' என்ற விளம்பரக் கம்பெனி நடத்தினேம். 1946-ல் அக்கூட்டுக் கம்பெனி கலைந்துவிட்டது. பிறகு திரு. G. V. M. அவர்கள் கோவை பாக்யலக்ஷ்மி பாங்கில் நகை மதிப்பினராய் அமர்ந்து பணியாற்றலாயினர்.

மூத்த மகன் திருமணம்

திரு G.V.M. அவர்களின் முத்தமகன் ஹரிகிருஷ்ணனுக்கு சேலம் திரு. C. N. ராதாகிருஷ்ண செட்டியார் திருமதி. சகுந்தலா அம்மையார் இவர்களின் திருமகளான செல்வி ஜனபாய் அம்மையை 1957-ல் கோவை மாநகரில் திருமணம் செய்வித்தனர். அருட் சட்ட நெறியில் மிகு தீவிர அனுஷ்

டானமுடைய திருவிடைமருதூர் தவத்திரு, சுவாமிநாத அய்யர் அவர்களும், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கச் செயலர் அருள்திரு. ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களும் மற்றும் பல அடியவர்களும் திருமணத்திற்கு வந்து கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும். செல்வி அனந்தலக்ஷ்மி என்ற பெண்குழந்தையை ஈன்று திரு. ஹரி கிருஷ்ணன் தற்சமயம் சேலம் மாநகரில் ஆண்டவர் திருவருளால் நல்வாழ்வு நடத்தி வருகிறார்.

அறுபது ஆண்டு நிறைவு

1958-ல் திரு. G. V. M. அவர்களுக்கு அறுபதாண்டு நிறைந்தது. அப்போது வேறு எந்தவிதமான ஆடம்பரச் சடங்குகளும் வைத்துக்கொள்ளாமல், தம் மனைவியாரோடு திருவிடைமருதூர் குருகடாக்ஷம் திரு. சுவாமிநாத அய்யர் அவர்கள் இல்லத்தில் சென்று தங்கி, வழிபாடு ஆற்றி. அருளாசிகள் பெற்றுக் கோவை சேர்ந்தனர்.

இரண்டாவது மகன் திருமணம்

இவருடைய இரண்டாவது மகன் கருணாகரனுக்கு கரூர் திரு. குப்பன்ன செட்டியார் திருமதி. தனலக்ஷ்மி அம்மையார் இவர்களின் திருமகளான செல்வி மீனாக்ஷி அம்மையைத் திருமணம் முடித்து வைத்தனர். ஷை திருமணம் 22-11-1960-ல் பழனி மாநகரில் நடந்தது. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தின் உபதலைவர் திருவிசலூர் அருள்திரு. G. சரவணப்பிள்ளை அவர்களும், சங்கச் செயலர் அருள்திரு. ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களும், ஆடுதுறை அருள்திரு S. கிருணமூர்த்தி அய்யர் அவர்கள் குடும்பத்துடனும், திருவிடை மருதூர் 'ஸ்ரீ குருகடாக்ஷம்தாய்' அருள்திருமதி. ருக்மணி அம்மையார் அவர்களும் மற்றும் பல அடியவர்களும் திருமண வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருமணத்தில் அற்புதம்

ஷை திருமண சமயத்தில் நடந்த அருள் அற்புதங்கள்—அற்புத நிகழ்ச்சிகள்—பலவாகும். மணமகள் விநாயகர்

பக்திமிகுந்தவர். களிமண்கொண்டு, விநாயகர் திருவுருவச் சிலையைத் தன் கையாலேயே செய்துவைத்து வழிபடக் கூடியவர். திருமணம் நிச்சயம் ஆவதற்கு முன் ஒருநாள் மணமகள் கனவில் ஆண்டவர் மணமகனைக்காட்டி வைத்து "இவர் தான் உன் கணவர், நாளை காலை இவரது தந்தையார் இங்கு மணம் பேச வருகிறார்", என்று அருளினர். பெண் பார்க்கச் சென்ற திரு. முத்துசாமி செட்டியார் அவர்கள் மணப்பெண் விநாயகர் பக்தி மிகுந்தவர் என்பதையும் முதல் இரவு நடந்த கனவு நிகழ்ச்சியையும் அறிந்து மிக்க மகிழ்வுற்றனர்.

திருமணத்திற்கு முதல் நாள் மணமகன் நண்பர் சிலருடன் ஆயிக்குடி என்ற கிராமத்திலிருந்து பழனிக்குக் குதிரை வண்டியில் வந்துகொண்டிருக்கையில், அவ்வண்டியில் இருந்த சக்கரத்தின் ஆரக்கால்கள் ஒவ்வொன்றாகக் கழன்று, வண்டி ஓடிக்கொண்டிருக்கையிலேயே சாலையில் விழுந்துகொண்டே வந்தன. இந்த விஷயம் வண்டியோட்டுபவர்க்கோ, வண்டிக்குள் உட்கார்ந்துகொண்டு வந்தவர்களுக்கோ தெரியாது. சக்கரத்தின் ஆரக்கால்கள் யாவும் கழன்று விழுந்து வந்தன. வண்டி வேகமாக ஓடிக்கொண்டிருந்தபோது இந்தச் செயல் நிகழ்ந்ததால், 'குருநாதா' என்று கூறிய வண்ணம் வண்டியை நிறுத்தி யாவரும் இறங்கிவிட்டனர். வண்டி சாய்ந்துவிட்டது. ஆயினும் வண்டியில் இருந்தவர்களுக்கோ வண்டி ஓட்டியவர்க்கோ, குதிரைக்கோ, வண்டிக்கோ எந்தவிதமான சேதமும் ஒருசிறிதும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் அங்கு மற்றொரு குதிரை வண்டி, தெய்வாதீனமாகக் காலியாக வந்து, அவர்கள் அனைவரையும் ஏற்றிவந்து பழனிமா நகரில் சேர்த்தது. இப்படி எத்தனையோ அற்புதங்கள் அத்திருமண சமயத்தில் ஆண்டவர் அருளால் நிகழ்ந்தன.

திருக்கோயில் திருப்பணி தொடக்க ஆலோசனை

திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலிருந்து 28 மைல் தொலைவில் நாகலாபுரத்தை அடுத்துள்ள இரெட்டியபட்டியில் இருக்கும் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

திருக்கோயிலை விரிவாக்கி அமைக்கும் திருப்பணி நடத்தத் தொடங்குவது பற்றிச் சுவாமிகளின் அடியவர்களும் பழனி மாநகரில் இருந்த திரு. வை. கணபதி ஸ்தபதியார் B. A. அவர்களும், ஷியாரின் பெரியப்பாவான திருமிகு. செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களும் கலந்து ஆலோசித்துத் தீர்மானிக்கலாயினர்.*

மனைவியாரின் மாண்பு

திரு. முத்துசாமி செட்டியாரின் இரண்டாவது மனைவி திருமதி. சரஸ்வதி அம்மையார் அவர்கள் கணவனுர்க்கேற்ற காரிகையாய். ஆண்டவர் அருட்சட்டத்திலும் அதிதீவிரமான ஈடுபாடு உடையவர்களாய் அருள்வாழ்வு ஆற்றி வருகின்றனர். அடியார்களுக்கும், பிறர்க்கும் மனமுவந்து உபசரிப்பதிலும், விருந்திடுவதிலும் தலைசிறந்து விளங்குகின்றனர், தம் கணவனுர்க்கு முதுமையில் வலக்கை உணர்விழந்துபோன சமயத்தில் பல ஆண்டுகள் இன்முகத்துடனும், உள்ளன்புடனும் பணியாற்றி, அவருக்கு உற்றதுணையாக உதவினர். ஆண்டவர் அருளால் இவர்கட்குக் குருலக்ஷ்மி என்ற ஒரு பெண்மகவும், செல்வகுரு என்ற ஆண்மகவும் தோன்றி நன்கு அருட்செல்வத்துடன் விளங்குகின்றனர்.

இருப்பிட மாற்றம்

கோவை பாக்யலக்ஷ்மி பாங்கில் நகை மதிப்பினராகப் பணிபுரிந்து வந்த திரு. G. V. M. அவர்கள் அங்கிருந்து ஓய்வு பெற்றபின், கோவை மாநகர் வைசியர் வீதியிலிருந்த தம் வீட்டை விற்றுவிட்டு சேலம் மாவட்டத்தில் உள்ள ஏத்தாப்பூருக்கு 1967-ல் வந்து சேர்ந்து, அங்கு அபிநவம் என்ற இடத்தில் "ஸ்ரீ குருகடாக்ஷ நிலையம்" என்ற பெயரில் ஒரு வீடு அமைத்துக்கொண்டு வாழ்வாற்றலாயினர். இவருடைய

*இத்திருமணத்தின்போது தொடங்கப்பெற்ற திருப்பணி நல்ல முறையில் பூர்த்தியாகி, முதல் பிராகாரம், உற்சவ மூர்த்திகட்குக் கருங்கல் மண்டபம், விநாயகர் திருக்கோயில். தெற்கு வாயில் கோபுரம் முதலிய அம்சங்களுடன் இனிது அமைக்கப்பெற்று 14-9-1972-ல் மகாகும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. அடியார்-விடுதிகள் பலவும் அமைந்து சிறப்பான முறையில் பலர்க்கும் உதவுகின்றன.

ஷட்டகர். திரு. சுப்பிரமணிய செட்டியார் தம்பதிகள் இவர்களின் குடும்பத்திற்கு மிகவும் ஆதரவாக விளங்கு கின்றனர். இவர் ஊக்குவித்த வண்ணம் ஆண்டவர் சட்ட நெறியில் ஈடுபட்டு நல்வாழ்வு ஆற்றிவரும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் திரு. அப்பர் அவர்கள் இவர்களது குடும்ப நண்ப ராய்ப் பெரிதும் உதவி வருகின்றனர்.

இளைய மகள் திருமணம்

செல்வி குருலக்ஷ்மியைச் சேலம் மாவட்டம் ஆட்டை யாம்பட்டி திரு. நவநீதம் செட்டியார், திருமதி ஜெகதாம் பாள் அம்மையார் இவர்களின் குமாரரான திரு. பெத்தண்ண செட்டியார் என்கிற மணமகனுக்குத் திருமணம் (4-2-1968-ல்) செய்வித்தனர். அவர்களுக்குப் பாலகுரு என்ற ஆண்மகவு சட்ட அனுட்டான முறையில் தோன்றி வளர்ந்து வருகிறார். அவர்கள் தற்சமயம் தர்மபுரியில் நல்வாழ்வாற்றி வருகின் றனர்.

மூன்றாவது மகன்

செல்வன் செல்வகுரு தற்சமம் ஏத்தாப்பூரில் இருந்து கொண்டு, தினமும் புத்திரகவுண்டன் பாளையத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்று வருகிறார். அவரது வாழ்வு சிறந்து விளங்க ஆண்டவர் திருவருள் துணைபுரியுமாக.

உறுதியும் உயர்வும்

ஸ்ரீ G.V.M. அவர்கள் இறுதிவரை அருட்சட்டத்தில் அணு வளவும் தவறாது எவ்வளவு உடல் தளர்ச்சி ஏற்பட்டபோதும் மன உறுதியுடன் இருந்தனர். அந்நிலையிலும், ஆண்டவரின் அருட்பாடல்களைப் பாராயணம் செய்யச்சொல்லி, உருக்க முடன்கேட்டு அருளில் தோய்வர். இவரது திடநம்பிக்கையும், தீவிரவைராக்கியமும் மிகமிகப் போற்றற்குரியன. அதற்கேற் றபடி ஆண்டவரும் இவர்க்கு மிகச்சிறந்த வகையில் அருள் புரிந்து பேணலாயினர்.

திருவடிப்பேறு

திரு. முத்துசாமி செட்டியார் அவர்கள் 2-1-1974-ல் ஆண்டவர் திருவடி அடைந்தனர். மாதங்களிற் சிறந்தது

மார்கழி மாதம். தை முதல் ஆனிவரை தேவர்கட்குப் பகல் என்பர். ஆதலால் மார்கழி மாதம் தேவர்கட்கு விடியற் காலமாகும். "மாதங்களில் யான் மார்கழி மாதமாக இருக்கிறேன்". என்று பகவான் கீதையில் அருளியுள்ளார். சைவர்கள் போற்றும் ஆருத்ரா தரிசனமும், வைணவர்கள் போற்றும் வைகுண்ட ஏகாதசியும் இம்மாதத்தில்தான் வருகின்றன. உலகியற் செயல்களில் ஈடுபடாமல் இறைவனின் அருட்செயல்களுக்கே பயன்படுத்தும் மார்கழி மாதம் தெய்வமணம் கமழ் மாதமாகும். ஆண்டவர் குருபூஜையும் மார்கழி மாதம் அனுஷ விண்மீனில் அமைந்ததாகும்.

நட்சத்திரங்களில் சிறந்தது ஆண்டவர் அவதாரம் செய்த ரேவதி நட்சத்திரமாகும். மார்கழி மாதம் ரேவதி நன்னாளில் இவர் ஆண்டவர் திருவடியடைந்தது, இவர் ஆண்டவர் அருளில் எவ்வளவு தீவிரமாக ஈடுபட்டு வாழ்வு நடாத்தியவர் என்பதை நன்கு விளக்குகிறது.

திருமேனி அடக்கம்

ஏத்தாப்பூருக்கு அருகில் பாயும் வசிஷ்ட நதிக்கரையில் வசிஷ்டர் யாகம் செய்த புண்யபூமியில் இவரது திருமேனி அடக்கம் செய்யப்பெற்றது.

நன்றி

இவருடைய நட்பு எனக்குக் கிடைத்ததை என்வாழ்வில் கிடைத்த பெறவரும் பேருகக் கருதுகின்றேன். இவர்களின் குடும்பமும் எங்களது குடும்பமும் இரண்டறக் கலந்து விட்டன. இவர்கள் குடும்பத்தோடு தொடர்பு உண்டாக்கிய திருவருளுக்கு என்றும் என் நன்றி உரியது.

வாழ்க G. V. முத்துசாமி அவர்களின் பரம்பரை!
வாழ்க அருட்சட்ட நல்வாழ்வு!

இங்ஙனம்
பாலகவி M. K. வேங்கடராமன்

இவரைப்பற்றிச் சுற்றமும் நட்பும் கூறும் சில குறிப்புகள் இங்கு இடம் பெற்றுள்ளன. அவற்றையும் அன்பர்கள் படித்து நலம் பெறுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை.

கோவை. திரு. முத்துசாமி அடிகள்

போற்றிப் பதிகம்

பூவுல கிதனிற் போந்த புண்ணிய புருடா போற்றி
கோவைமா நகரும் வைஸ்யர் குலமும்செய் தவமே போற்றி
யாவரும் மகிழும் வண்ணம் இனியசொல் லுரைப்போய்
போற்றி
சேவையிற் சிறந்த தேச பக்தனுய்த் திகழ்ந்தோய் போற்றி 1

வேங்கட கோபா லார்யன் வித்தகச் சேயே போற்றி
ஓங்குசீர்ச் சுப்பு லக்ஷ்மி உவந்தருள் மகனே போற்றி
தேங்கமழ் யசோதை மாதைத் திருமணம் செய்தோய்போற்றி
நீங்கலில் லாமல் அன்பர் நெஞ்சகத் திருப்போய் போற்றி 2

சீரிய ஆடை யாகத் திகழ்கத ரணிவோய் போற்றி
பாரத தேவி யென்னும் பெண்ணிணைப் பயந்தோய் போற்றி
காரென உதவும் தூய கருணைமிக் குடையோய் போற்றி
நேரிய நடைகொள் நண்பர் குழுவிடை நிலைப்போய்
போற்றி 3

அரிகி ருட்டிணப் பேர்கொண்ட அருள்மக வீன்றோய் போற்றி
கிரியை செய் மந்திரங்கள் கிளத்து சீர்த் தியனே போற்றி
பரிவுடன் பூசை நாளும் பண்ணுமெய்ப் பக்தா போற்றி
துரிய நன் னிலையிற் றோய்ந்து திகழ்தவத் தூயோய்
போற்றி 4

அருட்கரு ணுக ரப்பேர்ச் சுதனையீன் றருள்வோய் போற்றி
பொருட்பெறு மறைக ளோதும் புண்ணியர் நண்பா போற்றி
தெருட்பெறு சரஸ்வ திப்பேர்ச் செல்வியை மணந்தோய்
போற்றி
இருட்கடி இருடிப் பட்டி எந்தையைப் பணிவோய்
போற்றி 5

திருவருட் சட்டம் பேணித் திகழ்ந்த சீரியனே போற்றி
குருவருள் கொண்டு நோய்கள் குமைக்கும் நற் குணனே
போற்றி
பருவரல் தவிர்க்கும் ஞானப் பருதியே அனையாய் போற்றி
புருவநன் னடுவில் ஞானப் பொற்சுடர் காண்போய்
போற்றி 6

செம்மைசால் குருலக் மிப்பேர்ச் செல்வியைப் பயந்தோய்
போற்றி
வெம்மைசெய் வினையை யெல்லாம் வெலும்வழி
யுணர்ந்தோய் போற்றி
மும்மையாம் மலங்கள் வேக முன்னவற் பணிவோய் போற்றி
இம்மைநன் னலமும் முக்தி யின்பமு மானோய் போற்றி 7

கோதில்சற் குணம்சால் செல்வ குருவினை யீன்றோய் போற்றி
ஓதிடு மறையின் சாரம் உணர்ந்த உத்தமனே போற்றி
ஜாதியும் மதமும் உன்னு தடியர்பால் சார்வோய் போற்றி
நீதிசால் நெறியில் என்றும் நிலைத்த நேர்மையனே போற்றி 8

சத்தியம் தவறு தோம்பும் சாந்தசற் குணனே போற்றி
பத்தியம் அன்பாய்க் கொண்டு பார்மிசை திகழ்ந்தோய்
போற்றி
சித்திக ணேசன் பாதம் சிரத்தணி சிறப்போய் போற்றி
பத்திமெய்ஞ் ஞானம் பேணும் பண்புசால் பெரியோய்
போற்றி 9

ஓமென வொளிரு மந்த்ரத் தொன்றி நன் றொளிர்வோய்
போற்றி
நாமமெல் லாமும் சொல்லி நன்றுபூ சிப்போய் போற்றி
சேமமெல் லாமும் நல்கிச் சிந்தையிற் செழிப்பாய் போற்றி
காமனை பிரம னைவெங் காலனை வென்றோய் போற்றி 10

சட்டத்தில் அணுவும் தப்பாத் தனிப்பெருந் தகையேபோற்றி
சிட்டர்கள் பால்மெய் யன்பு செய்துநன் றுய்ந்தோய் போற்றி
இட்டமெல் லாமும் பூர்த்தி செய்தருள் இனியோய் போற்றி
துட்டரும் திருந்தச் செய்யும் தூயநன் னடையோய்
போற்றி 11

அன்புரு வுடனே எங்கள் அகத்தமர் அறவோய் போற்றி
பொன்புகழ் பொறுமை நல்கிப் புனிதமாக் கிடுவாய் போற்றி
துன்பமெல் லாமும் நீக்கிச் சுடரொளி யருள்வோய் போற்றி
இன்பமெல் லாமும் நல்கி எமைப்புரந் திடுவாய் போற்றி 12

சிந்தையைக் கோயி லாகத் திகழச்செய் தவனே போற்றி
எந்தைநல் லிருடிப் பட்டி இறையையுள் ளமைத்தோய் போற்றி
பந்தபா சங்கள் நீத்த பதியுணர் வுடையோய் போற்றி
நந்தலில் அருளை நல்கும் நன்முத்துச் சாமீ போற்றி 13

நற்குடி யினிலே தோன்றி நற்புகழ் புனைந்தோய் போற்றி
நற்பெரி யோர்பால் நட்பும் ஞானமும் உடையோய் போற்றி
பொற்புசால் சட்டம் ஆயுள் நாளெலாம் புரப்போய் போற்றி
அற்புத மாய்ப்ப ரத்தோ டணைந்தெமைக் காப்போய் போற்றி 14

ஸ்ரீG.V.M. அவர்களின் வாழ்க்கைத் துணைவியார்.

திருமதி. ஸரஸ்வதி அம்மையார்

என் கணவர் திரு. G. V. M. அவர்களுக்குச் சிறுவயது முதலே ஆஸ்த்மா நோய் உண்டு. குளிர்காலம் ஆனல் அதன் குணம் சற்று அதிகமாகும். மிகுந்த துன்பம் தரும். டாக்டர்களிடம் காட்டி, எவ்வளவு செலவு செய்தும், குணமானபாடில்லை. அப்போதுதான் (1941-ல்) திரு. பாலகவி அவர்களின் தொடர்பு எங்கள் குடும்பத்தாருக்கு ஏற்பட்டது. ஆஸ்த்துமா நோய் தரும் துன்பத்தைக் கண்டு கஷ்டப்பட்ட பாலகவி அவர்கள் 1943-ல் ஆண்டவரின் சட்ட புஸ்தகம் ஒன்றைக் கொடுத்து, படித்து அதன்படி நடந்தால், செலவில்லாமல் குணமாகும் என்றார்.

என் கணவர் 'வழிகாட்டும் வான்பொருள்' என்னும் அந்தச் சட்ட புத்தகத்தைப் பூர்வ புண்ணியப் பயனல் படித்தார். தம் தந்தையாரைக் கலந்துகொண்டு பூஜைப் பொருள்கள் வாங்கி வந்தார். இருவருமாக அருட் சட்டம் ஏற்ரேம். நோய் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தது. அதுமுதல்

ஆண்டவர் எங்கள் குடும்பத்தில் நடத்திவரும் அருள் அற்பு தங்கள் ஏட்டிலும் எழுத்திலும் அடங்குவன ஆகா.

அவருடைய தமக்கையார் குமாரன் திரு. G. P. மோகன் ராஜ், திரு. A. V. கிருஷ்ண செட்டியார் திருமதி. கவுரி அம்மாள் முதலிய பலரும் சட்டம் ஏற்று நலம் பல எய்தினர்.

சட்டத்தினுல் விளையும் நலங்களைத் தம் சொந்த அனுப வத்தில் கண்ட என் கணவர், தாம் சட்டம் எடுக்கக் கார ணமாய் இருந்த திரு. பாலகவி அவர்களையும் சட்டம் ஏற்கச் செய்தனர். அதன்பின் தவத்திரு. சாதுராம் சுவாமிகளின் தொடர்பும் ஏற்பட்டது.

என் மகள் குருலக்ஷ்மிக்குப் பிறந்த நாள் முதலே காலையில் ஸ்நானம் செய்விக்கும்போது, தினமும் ஒருமாதிரி இழுப்பு வருவதுண்டு. மூன்று வயதுவரை அப்படியிருந்தது. பின்னர் டாக்டரிடம் காட்டித்தான் ஆகவேண்டும் என உறவினர் சிலர் எடுத்துச் சென்றுவிட்டனர். அங்கு 2 நாள் பார்த்துவிட்டு 'முடியாது' என்று திரும்பி வந்துவிட்டனர். அப்போது அவர்களைப் பார்த்து என் கணவர், 'இப்போ தாவது இறைவனை நம்புங்கள்' என்று சொல்லி குருநாதரின் அருள் திநீருற்றுப் பிரஸாதமே தடவி வந்தார். நாளடைவில் நோய் தீர்ந்து, பூரண குணம் ஏற்பட்டது. இது போலவே எங்களது வாழ்வில் என் கணவர் மூலம் ஆண்டவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம்!

மூத்த மகன்

திரு. M. ஹரிகிருஷ்ணன், சேலம்

என் நற்றவப்பயனுல், நான் தவம் மிகும் G. V. முத்துசாமி செட்டியாரர் அவர்களின் மகனுகப் பிறந்தேன். அவர் எங்களை நல்ல நெறியில் நடக்கும்படி பழக்கி தந்தையாயும், குருவா யும் தெய்வமாயும் விளங்கி வந்தார். அவருடைய அன்றுட அனுட்டானத்தில் ஒரு சிந்தனையை இங்கு தருகிறேன்.

தினசரி வழிபாடு

எங்கள் முன்னோர்கள் செய்த புண்ணியத்தால் குருநாதர் சட்டத்தில் சேர்ந்து 30 ஆண்டுகட்கு மேல் ஆயின. நாள்தோறும் அதிகாலையில் 4 மணிக்கு நீராடி, ஆண்டவர்க்குத் திருப்பள்ளி எழுச்சிபாடி, ஆராதனை செய்து, பின் முன்னவனுர்க்கு அபிஷேகம் நடத்தி, வஸ்திரம் சாத்தி, மலர் தூவி, அர்ச்சனை செய்து, தூபதீபம் காட்டி, வழிபாடு நடத்துவதற்குள் நைவேத்தியம் தயாராகிவிடும். ஆராதனை செய்த பின், துதிப்பாடல்கள் பாடி, வாழ்த்து பாடி, மங்களம் பாடி, கர்ப்பூர ஆர்த்தி காட்டி பூஜை முடித்த பின், அனைவரும் திருநீறு, தீர்த்தம் பெற்றுக்கொள்வோம். தினமும் வீட்டில் தயாரிக்கும் உணவுப் பண்டம் அனைத்தும் சுவாமிக்குப் படைத்தபின்தான் அருந்துவோம். மாலையில் விளக்கேற்றியவுடன் பழம் படைதது்த் துதிப்பாடல்கள் பாடுவது வழக்கம். எங்கள் வீட்டில் சில குடும்பத்தார்கள் வாடகைக்குக் குடியிருந்தனர். அவர்களும் துதிப்பாடல்கள் பாடுவதில் உடன் கலந்து கொள்வர். ஒவ்வொரு வேளையும் கோஷ்டியாக நடத்தும் வழிபாடு, கோயில்களில் நடப்பது போலவே சிறப்பாக இருக்கும்.

மிகுந்த கருத்துடனும், படிப்படியாகத் தீவிரமாகியும் நல்ல முறையில் பூஜை நடந்து வந்ததால், பலரும் கண்டு மகிழ்ந்து தெய்வ நம்பிக்கையும், பக்தியும் மிகுந்து போற்றலாயினர்.

ஜுரம், பயந்த குணம், பிணுத்தல், காயம் முதலியவற்றிற்குப் பலரும் வந்து விபூதி பெற்றுச் சென்று நோய் நீக்கம் பெற்று நலம் அடைவர். 'பிள்ளையார் சட்டம் உள்ளவர் வீடு' என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது. தினமும் பலர் வந்து தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடிச்சென்றனர். இதைப் பின்பற்றிக் குடும்பத்தில் உள்ளோரும் ஈடுபடலாயினர். எத்தனையோ சோதனைகள் நடந்தன. ஆண்டவர் அருளால் வெற்றியே கிடைத்தது.

பரம்பரைச் சிறப்பு

கோயம்புத்தூரில் 'கிரந்தி' (GRANDE) என்ற குடும்பம் பெயருடனும் புகழுடனும் விளங்கிய ஒன்றாதலின், குடும்பப் பெயரைச் சொன்னாலே மற்றவர்கள் மரியாதை கொடுப்பார்கள். இவருடைய தகப்பனார் (என் பாட்டனார்) உயர்திரு. கிரந்தி வேங்கட கோபால செட்டியார் அவர்களும் தெய்வ வழிபாட்டில் உள்ளவர். அவருடைய பூரண சம்மதம் பெற்று நாங்கள் குருநாதர் சட்டத்தை அனுஷ்டிக்கலானோம். அவர் வடமொழியில் நல்ல பாண்டித்யம் உள்ளவர். அவருக்குப் பல மொழிகள் பேச, எழுதத் தெரியும். பிராம்மண பண்டிதர்கள் பலரும் அவரிடம் வந்து வேத சம்பந்தப்பட்ட விஷயங்களில் தெளிவு பெற்றுச் செல்வர்.

குடும்பம் பொருளாதார நிலையில் நடுத்தரக் குடும்பமே ஆயினும், விருந்தோம்பல் தொன்றுதொட்டு நடந்து வந்துள்ளது. எத்தனையோ ஏழைகளுக்கு மனமுவந்து உதவியதில், அவர்கள் நல்ல நிலைக்கு வந்துள்ளனர். அவர்களால் வந்த பிரதியுபகாரத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

நோய் நீங்கியமை

என் தந்தையார்க்கு 'ஆஸ்த்மா' நோய் இருந்து மிகவும் சிரமப்படுத்தியது. குருநாதர் சட்டத்தால் அது தீர்ந்து, பூர்ணகுணம் ஏற்பட்டது. சட்டம் ஏற்க உதவிய பாலகவி M. K. வேங்கடராமன் அவர்கள் எங்கள் குடும்ப நண்பர். பின்னர் அவர் மைத்துனர்க்கு என் தந்தையாரின் சகலர் மகளைக் கொடுத்து, உறவினரும் ஆகிவிட்டோம். என் தந்தையார் என்னையும், என் தமக்கையையும் தம்பியையும் தொடர்ந்து படிக்கச் செய்தனர்.

மனம் தளராமை

1946-ல் கோவையில் பிளேக் நோய் பரவியது. நாங்கள் இருந்த பகுதியில் தொல்லை ஏற்பட்டு, பலரும் வீடுகளைக் காலிசெய்துகொண்டு வெளியூர்கட்குப் போய்விட்டனர். • குருநாதர் துணை இருக்கையில் நான் எங்கும் செல்ல

வேண்டியதில்லை' என்ற திடத்துடன் என் தந்தையார் அங்கேயே தங்கிவிட்டார். குடும்பத்தில் உள்ள நாங்கள் எல்லாம் அங்கு தங்கி இருக்க அச்சப்பட்டதால், எங்களை எல்லாம் வெளியூருக்கு அனுப்பிவிட்டு, அவர் மட்டும் அங்கேயே தைரியமாகத் தங்கியிருந்து, ஆண்டவர் வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தார். 'பிளேக் நோய்' கண்ட எலிகள் வீட்டில் பல இடங்களில் விழுந்து கிடக்கும். குருநாதர் பெயர் சொல்லி எடுத்துச் சென்று வெளியில் எறிந்துவிடுவார். ஆண்டவர் அருளால் அவர் பூர்ண ஆரோக்யமாகவே இருந்தார்.

பிணி நீக்கியமை

ஒரு முறை என் அத்தை மகன் திரு. G. P. மோகன்ராஜ் என்பவருக்குக் காலில் சிலந்திபோல் வந்து, 4 அங்குல அளவுக்கு ரணமாகி நீர்வடியலாயிற்று. பலரும் பயந்து டாக்டரிடம் அழைத்துச் சென்று, 'ஆபரேஷன்' செய்ய வேண்டும் என்றனர். குருநாதர் சட்டப்படி நீராட்டம் செய்வித்துத் திருநீற்றுப் பிரஸாதம் வைத்துக்கட்டி வந்ததில் பூர்ண குணம் ஏற்பட்டது. பலரும் வியந்து ஆண்டவர் அருளைப் போற்றினர்.

நிலை கலங்காமை

அக்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, என் தமக்கையார் பாரதா தேவிக்குச் சிறு வயதிலேயே திருமணம் நடத்த விரும்பினர். வழக்கப்படி ஜாதகப் பொருத்தம் பார்த்தல் முதலியன ஏதும் செய்ய வில்லை. "சட்ட நெறியில் நம்பிக்கை உள்ள எனக்குக் குருநாதர் உத்தரவு கொடுத்தால் யாருக்கு வேண்டுமானாலும் என் பெண்ணைத் தருவேன்", என்றனர். அப்போது ஒருவர் ஒரு பணக்கார மாப்பிள்ளையைக் கூட்டி வந்தார். பையன் கொஞ்சம் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவன். 'இவனுக்குப் பெண்கொடு' என்று அவர் கூறச் சற்றும் தயக்கமின்றி 'குருநாதர் உத்தரவு கொடுத்தால் நிச்சயம் பெண் தருவேன்', என்றனர். குருநாதரிடம் உத்தரவு கிடைக்காததால் அவர்க்குப் பெண் தரவில்லை. பின்னர்

குருநாதர் உத்தரவு கொடுத்தபடி 2-6-1946-ல் திரு. C. V. இராமச்சந்திர செட்டியாருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

அடுத்தபடி மூத்த மகனாகிய எனக்குத் திருமணம் செய்யும்போதும் குருநாதர் உத்தரவுப்படிதான் சேலத்தில் பெண் தேர்ந்தெடுத்தார். 24-11-1957-ல் திருமணம் நடந்தது. தற்சமயம் எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது.

இரண்டாவது மகனாகிய கருணாகரனுக்கும் குருநாதர் உத்தரவு படியே கரூரில் பெண் தேர்ந்தெடுத்தார். 24-11-1960-ல் பழனியில் திருமணம் நடந்தது. ஒரு முறை இவர் கரூருக்குச் சம்பந்தியார் இல்லத்திற்குச் சென்றிருந்த போது, அங்கு விநாயகர் பூசை சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. அக்கம்பக்கத்தார் பலரும் கலந்து கொண்டிருந்தனர். அப்போது அக்கூட்ட நடுவில் தேள் ஒன்று வந்து விட்டது. கூட்டத்தார் கூச்சலிட்டு எழுந்திருந்தனர். அச்சமயம் அங்கிருந்த என் தந்தையார் 'யாரும் எழுந்திருக்க வேண்டாம்' என்று கூறிவிட்டு, 'குருநாதா! அப்படியே அசையாது இருக்கட்டும் என்று தேளை நோக்கிச் சொல்ல அது சிறிதும் அசையாது அப்படியே இருந்தது. பூஜை முடிந்த பின், அதனை எடுத்து வெளியில் விட்டுவிட்டனர். கூடியிருந்தோர்கள் குருநாதர் சட்டத்தின் உயர்வைப் பற்றித் தெரிந்துகொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது.

வயது ஆகிவிட்ட காரணத்தால், 1966-ல் பாங்கு வேலையிலிருந்து ஒய்வுற்ற இவர் வீட்டுடன் இருக்க நேர்ந்தது.

நாவடக்கம்

ஒருமுறை இவர் இராசிபுரத்தில் உள்ள தம் தமக்கையாரி வீட்டிற்குச் சென்றிருக்கையில், அவர்கள் பாயசத்திற்கு ஜீனிபோடும்போது, தவறுதலாக உப்புத்தூள் நிறையப் போட்டுவிட்டனர். முதலில் அதனை அருந்திய இவர் ஒன்றும் கூறாமல் அமைதியாய் அருந்திவிட்டு, வியாபாரத்திற்காக

வெளியூர் சென்று மாலையில் திரும்பி வந்தார். மதியம் பாயசம் அருந்திய யாவரும் உப்பு, உப்பு என்றனர். இவரது தமக்கையார், என் தம்பி சாப்பிட்டபோது ஒன்றும் சொல்ல வில்லையே, என்றனர். பிறகு அருந்திப்பார்த்து உப்புதான் என்றனர். மாலையில் இவரிடம் அதே பாயசத்தை மீண்டும் தர, இவர் மகிழ்வுடன் வாங்கி அருந்தினர்.

இருப்பிட மாற்றம்

1966-ல் பாங்கிலிருந்து ஓய்வு பெற்றதும், கோவையி லிருந்த சொந்த வீட்டை விற்றுவிட்டு, பின்னர் சிக்கல் ஏதும் ஏற்படாதபடி அவரவர்க்குச் சேரவேண்டிய தொகை யைக் கொடுத்துவிட்டனர்.

யானும், என் தம்பி கரணகரனும், எங்கள் மனைவியரும் எவ்வளவு அழைத்தும், எங்கள் வருமானத்தில் வாழ்வாற்ற விருப்பமின்றி, தமக்குரிய தொகையுடன் ஒரு மகன் ஒரு மகளுடன் கிராம வாழ்க்கையில் நிம்மதிகாண எண்ணி சேலம் மாவட்டத்தில் உள்ள ஏத்தாப்பூருக்கு 1967-ல் சென்று சேர்ந்தனர். அங்கு இருவரையும் பள்ளியில் சேர்த்து கல்வி பயிலச் செய்தனர். இருக்க ஒரு சிறு வீடும், கொஞ்சம் விளை நிலமும் வாங்கிக்கொண்டு, அந்நிலத்தில் வரும் வருமா னத்தில் சிக்கனமாக வாழ்வாற்றி வந்தனர். அங்கு அவருடைய சகலர் திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர் களும், அவர்களின் துணைவியார் திருமதி இராதாலக்ஷ்மி அம்மையாரும் மிக்க ஆதரவு கொடுக்கலாயினர். இரு வீடுகளும் அடுத்து அமையவும், ஒரே குடும்பம்போல் இருந்து வந்தனர். பின்னர் முதுமை காரணமாக வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருக்கலாயினர்.

தங்கை திருமணம்

பின்னர் தங்கை குருலக்ஷ்மியின் திருமணம் நிகழ்ந்தது. குருநாதர் உத்தரவுப்படி ஆட்டையாம்பட்டி திரு. நவநீதம் செட்டியார் குமாரர் திரு. பெத்தண்ணன் என்பவருக்கு 1968-ல் மணம் செய்துகொடுத்தனர்.

அருள் அற்புதம்

ஒருமுறை என் தமக்கையார் வீட்டில் பூஜையில் உள்ள விநாயக மூர்த்திக்கு வெள்ளிக்கவசம், பிரபை, குடை முதலிய பூஜை சாமான்களை எல்லாம், வெள்ளியில் தயாரித்து, சேலத்தில் மறுநாள் சாத்துபடி செய்து, விசேஷ பூஜை நிகழ்த்துவதற்காகப் பஸ்ஸில் எடுத்து வந்தவர், பஸ்ஸை விட்டு இறங்குகையில் இரவு நேரம் ஆதலின் தூக்க மயக்கத்தில் ஞாபக மறதியாக ஷை பொருள்கள் யாவும் இருந்த பையை எடுத்துக் கொள்ளாமல், பஸ்ஸிலே விட்டு விட்டு வீட்டுக்கு வந்துவிட்டார். பிறகு யாவரும் பேசிக் கொண்டிருக்கையில் ஷை பொருள்களை எடுத்துக்காட்டப் பையைப் பார்க்கையில், மேற்படி பை பஸ்ஸிலேயே நின்று விட்டதென்ற விவரம் தெரியவந்தது. 'குருநாதா! இப்படியாகிவிட்டதே. நீதான் காத்தருள வேண்டும்' என்று போற்றியவராய், உடனே பஸ் நிலையம் சேர்ந்தார். அங்கு அந்தப் பஸ் இல்லை. பின்னர் நீண்ட நேரம் காத்தும் பஸ் வராததால், மேற்படி பஸ் கம்பெனிக்குச் சென்று பார்த்தார். அப்போதுதான் அந்தப் பஸ் அங்கு வந்தது. உடனே உள் சென்று பார்க்க, மேற்படி பை வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. அதன் உள்ளிருந்த பொருள்கள் அனைத்தும் அப்படியே இருந்தன. ஆண்டவரின் அருட் பெருங்கருணையை உன்னி உன்னிப் பரவசம் அடைந்தவராய் பெண் வீட்டுக்குச் சென்று சேர்ந்து, மறுநாள் அதிகாலை குறிப்பிட்டவண்ணம் சாத்துபடி செய்து வழிபாடு நடத்தினர். யாவரும் அடைந்த வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை. குருநாதர் சோதனைசெய்து, அருள்புரிந்த சம்பவங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்றாகும்.

சேலத்தில் என் தமக்கையார்க்குப் பேரன் பிறந்த விவரம் தெரிந்து என் தந்தையார் பார்க்கச் சென்றார். குழந்தை பிறந்து 48 மணி நேரம் ஆகியும், மலமோ, நீரோ இறங்கவில்லை என்று பலரும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கையில், 'குருநாதா' எனச் சொல்லி, இவர் குழந்தைக்கு விபூதி இட்ட உடனே குழந்தை சிறுநீர் கழித்தது. குருநாதர்

கடாக்ஷமே தனிச் சிறப்புடையது என்று கூடியிருந்தோர் கூறி மகிழ்ந்தனர்.

1960-ல் முதல் முறையாகக் குருநாதர் சந்நிதிக்கு என் தந்தையார் செல்லும்போது, என் மனைவி ஜனுபாயும் சென்றிருந்தாள். கோவில்பட்டியிலிருந்து நாகாலாபுரம் செல்கையில் விளாத்திக்குளத்திற்கருகில் உள்ள ஆற்றில் மழை காரணமாக நீர் நிறையப் போய்க்கொண்டிருந்ததால், பஸ் அக்கரையிலேயே நின்றுவிட்டது. நீர் வடிந்தால் செல்லலாம் என்று பலரும் காத்துக்கொண்டிருந்தனர். நீர் வடிவதாகத் தோன்றவில்லை. இரவு மணி 7 ஆகிவிட்டது. அப்போது அங்கு இரட்டை மாட்டு வண்டி என்று எதிர்பாராமல் வந்து சேர்ந்தது. வண்டியை அடுத்தகரைக்கு அவசரமாகக் கொண்டுசெல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், மாடுகள் இன்றி வண்டியை மட்டும் இரண்டு ஆட்கள் பிடித்துத் தள்ளிக்கொண்டுபோவதாக முடிவு செய்தனர். மறுகரைக்குப் போக விரும்புவோர் வந்தால் அழைத்துச் செல்வதாகக் கூறினர். அச்சத்தினுல் யாரும் வண்டியில் ஏறவில்லை. 'குருநாதர் துணையிருக்கையில் நாம் ஏன் பயப்பட வேண்டும்?' என்று என் தந்தையார் அவ்வண்டியில் ஏறிக்கொண்டனர். என் மனைவி ஜனுபாய் கர்ப்பவதியாக இருந்தமையால், குருநாதர் கோவிலுக்குச் செல்லும் மற்ருெருதாயின் உதவியால் மேற்படி வண்டியில் ஏறினர். இரண்டு ஆட்கள் இழுத்துச்செல்ல, ஆற்றில் பாதிதூரம் சென்றதும், வண்டியில் நனையும் அளவுக்குத் தண்ணீர் பெருக்கு அதிகரிக்கலாயிற்று. குருநாதர் விரும்பினுல் கோவிலுக்குச் செல்வது தடைபடாது என்று பிரார்த்தித்துக் கொண்டே, வண்டியை இழுப்பவர்களுக்குத் தைரியம் ஊட்டிவந்தனர். ஆண்டவர் அருளால் ஒருவாறு வண்டியும் ஆற்றைக் கடந்து மறுகரை சேர்ந்தது. வண்டியில் ஏற அஞ்சியவர்களும் வியப்புமிக்கெய்தினர். என்னே குருநாதரின் அருட் பெருங்கருணை என்று மனமாரப்போற்றினர்.

குருபூஜை விழா

நாங்கள் யாவரும் கோவையில் இருந்தபோது, ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் ஆண்டவர் குருபூஜை நாளாகிய அனுஷ நன்னாளில் தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்து, ஸ்ரீ குருநாதரின் பெரிய திருவுருவப் படத்தை ஊஞ்சலில் எழுந்தருளப்பண்ணி, சிறப்பான முறையில் அலங்கார ஆராதனை, பஜனை, பாராயணம், பிரசங்கம் பிரஸாத விநியோகம் முதலியன சிறப்பாக நடந்து வந்தது. ஊர் மக்களும் பக்தர்கள் கூட்டமும் வந்து கலந்துகொள்வார்கள். ஏத்தாப்பூருக்குக் குடிபோன பிறகும் ஓரளவு சிறப்பாகவே நடத்திவந்தனர்.

எங்கள் பாட்டனார் படித்த வேத சாஸ்திரங்கள் உபநிஷத்துக்கள் முதலிய பல பாஷைப் புத்தகங்களை எங்கள் தந்தையார் கோவை ஆரிய வைசிய சமாஜத்திற்கு நன்கொடையாக வழங்கிவிட்டார்.

ஒருமுறை இவர் குருலக்ஷ்மி தம்பதிகளுடன் குருநாதர் சந்நிதிக்குச் சென்று திரும்புகையில், கரூரில் என் தம்பி கருணாகரனின் மாமனார் வீட்டில் ஒருநாள் தங்கினர். அப்போது கரூரில் உள்ள லலிதா மகிளா சமாஜத் தலைவரும் அங்கத்தினர்களும் வந்து சந்தித்து, யோக சம்பந்தமாயும். வேத சம்பந்தமாயும் பல கேள்விகள் கேட்டனர். அதற்கு இவர் பொருத்தமான பதில் அளித்ததைக் கேட்டு, இவர் பெற்றிருந்த ஞானத்தை உணர்ந்து வியப்புமிக்கெய்தினர்.

ஒருமுறை கரூரில் பிள்ளையார் வைத்துப் பூசித்துக் கடைசியில் திருவுலா நடத்தி ஆற்றில் விடச்செல்லும்போது, அவ்விநாயகர் சிலையிலிருந்து வெள்ளை நிற ஜோதியொன்று வெளிப்பட்டதைக் கண்டு மற்றவர்களுக்குக் கூறினர்.

அருள் நிட்டை

கோவையில் இருந்தபோது, சிறு வயதிலேயே இவர் அடிக்கடி பல மலைகளுக்குச் சென்று நிஷ்டையில் அமரும்

பழக்கம் உள்ளவர். ஆதலால் குருநாதர் சட்டம் ஏற்றுக் கொண்ட பின்னும் இவர் வீட்டிலேயே தவருமல் இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.

தளரா உறுதி

ஏத்தாப்பூரில் எழுந்திருக்க முடியாமல் இவர் படுத்துக் கொண்டே இருந்த சமயத்திலும்கூடப் பச்சைநீர் ஸ்நானம் காலம் தவருமல் நடந்து வந்தது. கடைசி நிலையில், தினந்தோறும் அதிகாலையில், குழந்தையை எடுத்துச்செல்வது போல் எடுத்துச்சென்று, காலம் தவருது நீராட்டம் செய்வித்து, துடைத்து, உடம்பு முழுவதும் திருநீறு பூசி, பின்னர் படுக்க வைப்பர். அந்நிலையிலும் பலர் வந்து, ஆஸ்பத்திரிக்குச் செல்லலாமே, டாக்டரிடம் காண்பிக்கலாமே என்பார்கள். அப்போதும் விடாப்பிடியாகத் திடசித்தத்துடன் கடைசிவரையில் தொடர்ந்து சட்ட நெறியில் நின்று அருள் வாழ்வாற்றினர்.

திருவடிப்பேறு

2-1-1974 புதன்கிழமை பகல் 1-07 மணிக்கு என் தந்தையார் ஆண்டவர் திருவடி அடைந்தனர். உடனே எடுத்து உட்காரவைத்து மலர்மாலை சாத்திஞேம். கிராம மக்கள் பலர் வந்து பார்த்து ஒப்பாரி வைத்து அழத்தொடங்கினர். 'அவர் தெய்வமாகிவிட்டதால், இங்கு யாரும் அழக்கூடாது' எனத்தடுத்துவிட்டோம். 3-1-1974 வியாழக்கிழமை அதிகாலையில் ஊரவரும் உறவினரும், பால், பழரசம், பன்னீர் பஞ்சாமிர்தம் முதலிய பல பொருள்களைக்கொண்டு முறைப்படி அபிஷேகம் நடத்தி, அலங்காரம் செய்து, பஜனை நடத்தியபோது, முருகன் அருள் பெற்ற ஒரு தாய் மீது அருள் ஆவேசம் வந்து பாட்டு வடிவில் அருள் வாக்கு அருளினர். 30 ஆண்டுகளாப் பூர்ண நம்பிக்கையுடன் ஆண்டவர் சட்டத்தில் இருந்து, பலர் அறியப் பல சந்தர்ப்பங்களில் ஆண்டவர் அருளைப் பரப்பிய இவர், குடும்பத்தில் யாருக்கும் எந்தக் குறையும் என்று வைக்காமல், குருநாதர் திருவடியில் சேர்ந்து விட்டனர் என்று அவ் அருள்வாக்கு வந்தது.

பின்னர் இவர் சேலம் அடியாருக்குக் கனவில் தோற்ற மளித்து, ஆற்றில் நீராடி, தன் சமாதியை 3 முறை வலம் வந்து, குறைகள் நீங்கும்படி வேண்டிக்கொண்டால் குண மாகும் என்று சொல்லி மறைந்தனர்.

3-1-1974 காலை அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து, திருமேனியை ஊர்வலமாக எடுத்துச்சென்று ஆற்றங்கரையில் கட்டப்பெற்றிருந்த சமாதிக் கட்டிடத்தில், விபூதி, வில்வம் முதலிய பொருட்களுடன் முறைப்படி அடக்கம் செய்வித்தோம்.

4-1-1974 காலையில் ஜோதி வடிவில் களிமண்ணால் அமைத்து அபிஷேகம் நடத்திப் பழங்கள் வைத்துப் படைத் தோம். 11-வது நாள் அதாவது 12-1-1974 சனிக்கிழமை காலையில், முன்னரே அங்கு கட்டப்பட்டிருந்த கட்டிடத்தின் மேல், வாழை மொக்குபோன்று கருங்கல்லில் ஜோதி வடிவில் அமைக்கப்பெற்ற சிலைக்கு அபிஷேகம் ஆராதனை நடத்தி, பஜனை பாடி வழிபாடு செய்தோம். ஊரவர், உறவினர், சட்ட அடியார்கள் முதலிய பல அன்பர்கள் கலந்துகொண்டு வழிபாடாற்றி அருட்பேறு பெற்றனர்.

இளைய மருமகள்

திருமதி. மீனாட்சி கருணாகரன், கரூர்.

என் மாமனார்திரு. G. V. முத்துசாமிசெட்டியார்அவர்கள் ஆண்டவர் திருவடி அடைவதற்கு 5 தினங்களுக்கு முன்பே என் கனவில் தோன்றினர். விபூதிப்பட்டை, பஞ்சகச்சம் கட்டிய வஸ்திரம், கதர் ஜிப்பா இவைகளை அணிந்த வண்ணம் வந்து நின்றார். வீட்டுக்கு வந்தவர்க்கு நல்வரவுகூறி உள்ளே வரச்சொல்லி, உணவு அருந்த அழைத்தேன். 'யான் பயணமாகி விட்டேன்; சாப்பிடுவதற்கில்லை', என்று சொல்லி மறைந்து விட்டார். எழுந்து பார்த்தேன். வியாழன் காலை மணி 4 ஆயிற்று. உடனே புறப்பட்டு ஏத்தாப்பூருக்கு வந்துவிட்டோம். அருள் துணை கொண்டு இயன்ற அளவு பணிவிடை புரிந்தோம். அவர் ஆண்டவர் திருவடியடைந்த பின் திருமேனியை அடக்கம் செய்வதற்கு உரிய முறைப்படி

ஆவன புரிந்தோம். எல்லாம் வல்ல திருவருள் அவ்வப்போது உணர்த்தி, யாவும் செவ்வையாக நிகழத் துணை புரிந்தது.

எல்லாச் செயல்களும் செய்து முடிந்த பின், அவர் என் கனவில் காட்சியளித்தார். 'அருட் சட்ட நெறிக்கு ஏற்ப நீங்கள் செய்த செயல்கள் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது' என்று சொல்லி மறைந்தார்.

அவரால் நாங்கள் பெற்ற அருள் நலங்கள் பல: அவற்றுள் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

என் தாயார் பஸ்ஸில் சென்றால் அவர்களுக்கு வாந்தி வரும். ஆதலால் பஸ் பிரயாணம் என்றால் அவர்கள் சாப்பி டாமல்தான் வருவார்கள். 1960-61-ல் நாங்கள் குருநாதர் சந்நிதிக்குச்சென்று, தரிசித்துத் திரும்பும்போது, என் மாமனார், 'சாப்பிடாமல் போகக்கூடாது' என்று என் தாயாரைத் தடுத்து நிறுத்திவிட்டார். சாப்பிட்டுச் செல்லும் படியும், குருநாதர் அருளால் வாந்தி வராது என்றும் சொன் னார். அதன்படி என் தாயார் சாப்பிட்டுப் புறப்பட்டார். அப்போது வாந்தி வராமல் இருந்தது மட்டுமின்றி, இப்போதும் என் தாயார் எவ்வளவு தூரம் பஸ் பிரயாணம் சென்றாலும் வாந்தி வருவதில்லை. நன்றாக ஆரோக்கியத் துடன் சென்று வருகிறார்.

மூன்றாவது மகன்

திரு. M செல்வகுரு, (அபிநவம்) ஏத்தாப்பூர்

என் தந்தையார் எனக்கு அறிவுரைகள் கூறியபோது முதலில் அவர் சொன்னது : "நான் சட்டம் எடுத்தது முதல் கைவிடாமல் இருந்ததுபோல், நீயும் கட்டாயமாக சட்டத் தைக் கைவிடக்கூடாது ; இது மிகவும் முக்கியம்", என்று கூறிய பின்புதான், பிற விஷயங்களைக் கூறினார். அதாவது "தாயாரை நீதான் காப்பாற்ற வேண்டும். அம்மாவை விட்டுப் பிரியாமல், அம்மாவுடன் இருந்து, அம்மாவுக்குத் துணையாகவும் இருக்க வேண்டும்", என்றார். மீதியைப் பின்னர்தான் சொன்னார்.

மற்றும், தினந்தோறும் வேளை தவறாமல் குளி; சுவாமியின் பூஜைகளையே கவனி; இதைத்தான் செய்ய வேண்டும் என்பார். மந்திரங்களைக் கற்று, நல்ல முறையில் பூஜைகளை செய்ய வேண்டும் என்பார். பூஜையைப் பற்றியே குறிப்பிடும் காரணத்தைக் கொண்டு, அவர் சட்டத்தின் முறையைக் கைக்கொண்ட விவரங்கள் நன்கு தெரிகின்றது. மற்றும் பூஜை செய்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் கோபம் கொள்வார்.

இவருக்கு முக்கியமாக தினந்தோறும், தேதி காலண்டரில் முன்தேதியை கிழித்ததும், அவருக்குப் படித்துக் காண்பிக்க வேண்டும். அதன் மூலம் அன்றைய நிகழ்ச்சிகள், அதாவது அவருக்கு உடல்நிலை இருக்கும் நிலையைத் தெரிவிப்பார். உடல்நிலை இன்று நன்றாக இருக்கும், நன்றாக இருக்காது என்று கூறுவது சரியாகவே இருக்கும்.

படுக்கையில் படுத்து இருக்கும்போதுகூடக் கடவுள்மீது பாடல்கள் நன்றாகவும் தெளிவாகவும் பாடினார். கடவுளையே நோக்கினார். கடவுளின் கருணையும் கிட்டியது எனத் தெரிகிறது. படுக்கையில் படுத்திருக்கும்போது ஏற்படும் புண் (ரணம்) நிறைய இருந்தது. 'இப்படி உள்ளதே என்ன செய்வது?' என்று கேட்டால், 'நீறு போட்டுவிடு. நாளையே இருந்த இடம் தெரியாமல் சென்றுவிடும்' என்று கூறுவார். அதேபோல் நடந்து வந்தது. அதுவும், படுக்கையானது சுவாமிகள் அறையின் அருகில் அமைந்தது மிகவும் விசேடமானதாக இருந்தது. மற்றும் 'குருநாதா! குருநாதா!' என எப்போதும் கடவுள் பெயரையே கூறுவார். இங்குகூடப் பலர் நோய்களோடு வந்து விபூதியைக் கேட்டால், அதை இறைவனிடம் வேண்டி, அவர்களுக்குத் தந்து, 'நோய் இருக்கும் இடத்தில் தேய்த்துக்கொள், சரியாகிவிடும்' என்பார். அதேபோல் சரியாகிவிடும்.

ஒரு முறை இரயில் ரோட்டில் செல்லும்போது அவரும் அவர் நண்பரும் ஏதோ பேசிக்கொண்டு செல்லும்போது, பின்புறம் கூட்ஸ்வண்டி வந்ததாம். இருவண்டிகள் ஒன்றோ

டொன்று சேரும் இடத்தில் உள்ள இருவில்லைகள் இவர் முதுகின்மேல் அடித்ததாம். ஆனல் உடனே நகர்ந்து கொண்டாராம். பின்னர் வலியே ஏற்படவில்லை என்று அவர் பலமுறை சொல்லி உள்ளார். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் அதிசயமாக நடந்துள்ளன.

இளைய மருமகனர்

ஆட்டையாம்பட்டி. திரு, பெத்தண்ண செட்டியார்

1967-ம் ஆண்டின் இறுதியில் நான் திருச்சியில் பணி புரிந்ததுபோது, ஏத்தாப்பூரிலிருந்து கோவை திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்களின் திருமகள் செல்வி குருலக்ஷ்மியின் ஜாதகம் வந்தது. பெண்ணைப் பார்த்தேன். திருமணம் முடிவு செய்தனர். 4-2-1968-ல் பெரியோர்களின் ஆசியால் திருமணம் இனிது நடைபெற்றது. அப்போது யான் ஈரோட்டில் பணிபுரிந்து வந்தேன்.

1968 மார்ச் மாதம் கிருட்டிணகிரிக்கு மாற்றல் உத்தரவு வந்தது. அங்கு பணிபுரிய ஆரம்பித்தேன். 1968—ஜூலை மாதம் தனிக் குடித்தனம் கிருட்டிணகிரியில் வைக்க என் பெற்றோரும், மாமனர் மாமியாரும் வந்தனர். மாமனர் மாமியார் ஒருவாரம் தங்கினர். மாமனர் தன் மகளுக்கு வாங்கித் தரவேண்டிய சாமான்கள் அனைத்தும் வாங்கித் தந்தார். ஒருநாள் சப்பாத்தி செய்ய பலகையும் கட்டையும் வாங்க வேண்டும் என்று என் துணைவி கூறினள். 'சரி' என்றேன் நான். ஆனல் என் மாமனர் பல கடைகளிலும் கேட்டு, சுமார் 6 மைல் நடந்து அலைந்து, அவரே வாங்கி வந்து விட்டார். மாப்பிள்ளைக்குச் செலவு வைக்கக்கூடாது; வாங்கித் தருவது தனது கடமை என்பதைச் சொல்லாமல் செயலில் காட்டிய உத்தமர் அவர்.

ஊருக்குப் புறப்படும்போது, "மாப்பிள்ளை! தாங்கள் இத்தனை நாள் பிரம்மச்சாரி; தற்போது திருமணம் நடந்து விட்டது. குடும்பம் ஆரம்பம் ஆகிவிட்டது. அதிகாரிகளிடம் சரியாக நடந்துகொள்ளுங்கள்" என்று கூறினர். அதா

வது மாப்பிள்ளைக்கு எந்த அளவுக்கு அறிவுரை கூற வேண்டுமோ, அந்த அளவுக்குத்தான் அறிவுரை வழங்கினர்.

நான் எப்போது ஊர்க்கு வந்தாலும், மாமனர்க்கு வணக்கம் தெரிவிப்பேன். அவர் எந்த நிலையில் இருந்தாலும் இருகை தூக்கித்தான் வணக்கம் தெரிவிப்பார். கடைசி காலத்தில், முடியாத நிலையில், முடியாத நேரத்தில்கூடக் கைகளைச் சிறிது உயரம் தூக்கி வணக்கத்தைத் தெரிவித்தார். மாப்பிள்ளைக்கு, என்றும் எப்போதும் கொடுக்க வேண்டிய மரியாதைகளைக் குறைவின்றி இறுதிவரை கொடுத்து வந்தார்.

1969 மே மாதம் என் துணைவிக்குக் குழந்தை பிறந்தது. அவனுக்குத் தொட்டில் கட்ட அவரே கம்பிகளை எடுத்துச் சென்று, நேரில் இருந்து, முடித்து வாங்கி வந்து, கயிறுகளைக் கொண்டு கட்டினர். இந்த ஆண்டில் நான் அடிக்கடி முன் அறிவிப்பு இன்றி இரவு 9 அல்லது 10 மணிக்கு வருவேன். வீட்டில் ஒன்றும் இராது என நினைத்து வருவேன். ஆனல் மாப்பிள்ளைக்கு ஏற்ற உணவு தயாராக இருக்கும். இது எப்படி என்பது பின்னல் தெரிந்து கொண்டேன். நான் வருவது அவர்க்கு முன்கூட்டியே தெரியுமாம். ' மாப்பிள்ளை வருவார்; உணவு தயாராக இருக்கட்டும்' என்று கூறுவாராம். அவர் முக்காலமும் தெரிந்த தீர்க்கதரிசியோ அல்லது ஞானியோ நான் அறியேன்.

அவர் இறுதிவரை மருந்தோ, வெந்நீரோ உபயோகிக்கவில்லை இதிலிருந்து அவர் எந்த நேரத்திலும் எந்த நிலையிலும் சட்டத்தை விடவில்லை; தீவிரமாக இருந்தார் என்பது புரியும்.

நான் பொங்கல் பண்டிகை கொண்டாடுவது வழக்கம். எனவே என் மாமனர் அவருக்காகத் தீபாவளிக்கும், எனக்காகப் பொங்கலுக்கும் ஆண்டு தவருமல் அழைப்பு அனுப்பி, அவரால் இயன்றதை இறுதிவரை தந்தார். 1974 பொங்கலுக்குத்தான் எனக்கு அழைப்பு இல்லை. காரணம் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

1973 அக்டோபர் மாதம் அவருடைய உடல் நலம் மிகவும் குறைந்து காணப்பட்டபோது, அவரிடம் "தாங்கள் எனக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா", எனக்கேட்டேன்; "மாப்பிள்ளை! பாலகுருவை (என் மகனை) அடிக்காதீர்கள். நன்கு வளர்த்துப் பெரியவன் ஆக்குங்கள். அதேபோல், உங்கள் மகனாக செல்வ குருவையும் பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினர். எனது பொறுப்பை மிகச் சுருக்கமாகக் கூறித் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிவிட்டார். இக்கடமையை நான் நிறைவேற்ற, பணியாற்ற, அவர் கண்கண்ட இறைவனாக நின்று எனக்கு வழிகாட்டி என்னை நடத்திச் செல்வார் என உறுதியோடு நம்புகிறேன்.

ஷட்டகர்

திரு. சுப்ரமணிய செட்டியார், ஏத்தாப்பூர் (அபிநவம்)

ஒரு சமயம் எனக்கு ஹிரண்யா நோய் துன்பம் அதிகமாகி ஆபரேஷன் செய்துகொள்வதென 1957-58-ல் கோவைக்குச் சென்றேன். அங்கு அண்ணர் திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்து, அருகில் இருந்து ஆபரேஷன் செய்வித்து நல்லபடி குணமாக்கி, இரவு பகல் கவனித்து சம்ரக்ஷணை செய்து அனுப்பி வைத்தனர். ஏத்தாப்பூர் வந்து பூர்ண குணம் அடைந்தேன்.

பின்னர் 1967-ல் திரு. G. V. M. அவர்கள் தமது குடும்பத்தை ஏத்தாப்பூருக்கு மாற்றிக்கொண்டு இங்கு வந்து சேர்ந்த பிறகு, அவர்கள் ஏற்கனவே எனக்கு உதவிய நன்றியை வார்த்தைகளால் சொல்லிக் காட்டாமல், செய்கையால் உதவிபுரிய வேண்டும் எனக் கருதினேன். திரு. G. V. M. அவர்களின் ஆயுட்காலம்வரை அருகிலிருந்து உதவி வந்தேன். இனியும் அவர்கள் குடும்பத்திற்கு உதவி வர உள்ளேன்.

அவர்கள் ஏத்தாப்பூர் வரத் தீர்மானித்ததும், அவர்கள் மூலமாக அருட்சட்டம் ஏற்று நல்வாழ்வாற்றிவரும் நண்பர் திரு உப்பர் அவர்களிடம் வீடு அமைக்க இடம் கேட்டேன்

அவரும் பூர்ண மகிழ்வுடன் தமக்குச் சொந்தமான காலி மனையைத் தந்து, திரு G. V. M. அவர்களின் பொருட் செலவில் தன் மேற்பார்வையிலேயே கட்டிடம் அமைத்துத் தந்து, வேண்டிய அனைத்தையும் செய்து கொடுத்தார். எனக்கு வரவேண்டிய குத்தகை நெல்லையும் திரு. G. V. M. அவர்கட்கு, நன்றியுடன் கொடுத்து வருகிறேன்.

திரு. G. V. M அவர்கள் ஆண்டவர் திருவடி அடைந்த நாளில் நான் உடல் நலம் குன்றியிருந்தேன் தூக்கிச்சென்று நாற்காலியில் அமர்த்தினார்கள். சமாதியில் அடக்கம் செய்யப் பெற்ற நாள் இரவு என் கனவில் அவர் தோன்றி, 'வெயிலில் வைத்து விட்டீர்களே', 'நீங்கள் நல்வழிபாடு ஆற்றுங்கள், உங்கள் நோய் நீங்கும். நல்லாற்றல் தருகிறேன்; நலங்கள் அருள்கிறேன்; மருந்து ஒன்றும் அருந்த வேண்டாம்' என்றனர். மறுநாளே உடம்பு குணமாகிவிட்டது. நல்ல தெம்பு வந்துவிட்டது. தினமும் காலையில் நீராடி, சமாதிக்கு நடந்து சென்று, பிரதக்ஷிணம் செய்து வருகிறேன்.

மறுநாளே சமாதிக்கு மேல் நிழற்பந்தல் அமைத்தேன். பயற்றம் பறுப்பு, அரிசி, வெல்லம் கலந்து தயாரித்த பாயசம் போன்ற கஞ்சி நைவேத்யம் பண்ணச் சொன்னார். இரேவதி தோறும் இந்த நைவேத்யம் நடந்து வருகிறது.

இறையடியடைந்த பத்தாவது நாள் ஊரில் உள்ள சகல தேவதைகட்கும் அபிஷேக ஆராதனை செய்யவேண்டும்; பிறகுதான் 11-வது நாள் வழிபாடு நடைபெற வேண்டும் என்றார். அவ்வாறே நடைபெற ஆவன புரிந்தேன்.

வாயிலில் அருட்கொடி ஏற்றச் சொன்னார். மண்டல பூஜையன்று ஏற்றப்பெற்றது. குருபூஜை நாளில் ஏழை மக்கட்கு உணவுஅளிக்கச்சொன்னார். மண்டல பூஜையன்றும் அன்னதானமும், ஏழைகட்கு கஞ்சி வார்த்தலும் நடந்தன.

மைத்துனர்

திரு. K. பஞ்சநாதம் செட்டியார், சேலம்

அருள்திரு G. V. முத்துசாமி செட்டியார் அவர்களைக் குறித்து சிறு குறிப்பு எழுத எனக்குச் சந்தர்ப்பம் அளித்த

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் திருவுளத்திற்கும் அவர்களின் இலக்கியப் பதிப்பகத்தாருக்கும் முதற்கண் என் மனமார்ந்த நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அருள்திரு. G. V. M. அவர்கள் என் மைத்துனர் (என் சகோதரியின் கணவர்) என்ற எண்ணமே எனக்கும் என் குடும்பத்தாருக்கும் எழுவதே இல்லை. அவரை எங்கள் வழிகாட்டியாகவும், கண்கண்ட குருவாகவும்தான் பார்க்க முடிந்தது; நினைக்கத் தோன்றியது.

பேரருள் கிட்டி, ஜோதியுடன் அவர் இணையும்வரை எங்கள் இல்லத்தில் எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்கும் முன், அவர் எழுந்தருளியிருந்த இடத்திற்குச் சென்று, அவருடன் கலந்து ஆலோசித்து, அவர் உத்திரவின் பேரிலேதான் அந்தந்த காரியங்களைச் செய்யத் தொடங்கி, நல்ல விதமாய் முடிப்போம். உதாரணமாக என் இல்லக் கிழத்தி தன் தமக்கையாருடன் பத்ரி, கேதார்நாத் யாத்திரைக்குப் போகுமுன் அய்யா G. V. M. இடம் சென்று உத்தரவு பெறும்போது, மிகவும் சந்தோஷமாயும், உள்ளன் போடும் ஆசீர்வதித்தனுப்பினர். யாதொரு இடையூறும் கிலேசமுமின்றி, அகில இந்தியாவை வலம் வந்து, மறுபடியும் ஸ்ரீ அய்யா அவர்களிடம் ஆசி பெற்றுக்கொண்டாள். மேலும் அண்மையில் ஸ்ரீ அய்யா அவர்கள் உடல்நிலை மிகவும் மோசமாகிப் படுத்த நிலையில், பேச்சுவார்த்தை இல்லாத நிலையில், இறைவன் திருவருள் என் இல்லக் கிழத்தியை சபரி மலைக்கு அழைத்தது. ஸ்ரீ அய்யாவிற்கு உடல் நிலை மிகவும் மோசமாயும், கவலைக்கிடமாகவும் உள்ள இந்த சந்தர்ப்பத்தில் எப்படி மாலைபோட்டு விரதம் ஆரம்பிப்பது என்று மிகவும் வருந்தினோம்.

எதற்கும் ஸ்ரீ அய்யாவைப் போய் சந்தித்து ஆண்டவன் உத்திரவை தெரிவிக்கலாம் என்று எண்ணி, நானும் என் இல்லக்கிழத்தியும் போய் தரிசனம் செய்தோம். 5 நாட்களாய் உட்கார இயலாமலும், பேச இயலாமலும் இருந்த அவர்கள், பேச ஆரம்பித்து, தன்னை உட்கார

வைக்கச்சொல்லி, எங்கள் இருவரையும் தன் பக்கத்தில் அமரச் செய்து, பரிவுடன் விசாரித்து, நலமாகச் சபரி மலைக்கு யாத்திரை போய்வர, மாலைபோட்டு விரதம் இருக்க ஆக்ஞையிட்டார்.

அதேபோல் அவர் அருளால் என் இல்லக் கிழத்தியும் மாலைபூண்டு, விரதம் ஆரம்பித்து, சபரி யாத்திரைக்குப் புறப்படுமுன்னும், நாங்கள் இருவரும் ஸ்ரீ அய்யா அவர்களிடம் சென்று நல்லாசிகள் பெற்றோம். என் மனைவி சபரி யாத்திரைபோய், நலமுடன் திரும்பிவந்து, ஸ்ரீ அய்யா அவர்களிடம் ஆசிகள் பெற்றாள். எந்த நிமிடம் இறைவனடி சேர்வார், என்ற இக்கட்டான நிலையில் இருந்த போதும், என் இல்லக் கிழத்திக்கு அருள் செய்யக் காத்திருந்து ஆசிகூறி, சபரிமலை யாத்திரை முடிந்துவந்த 10-வது நாளில் ஸ்ரீ அய்யா இறைவனடி சேர்ந்தது என் வாழ்நாளில் மறக்க இயலா ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும்.

ஸ்ரீ அய்யா அவர்களும், என் குடும்பத்தார் யாவரும் குரு—சிஷ்யர்கள், தாய்—சேய்கள் என்ற முறையில் பழகினோமே தவிர, உறவின் முறையில் பழகவில்லை.

எனக்கும் என் குடும்பத்தாருக்கும், அவருடன் பழகிய யாவருக்கும் வழிகாட்டியாகவும், அருள் பாலிக்கும் அன்பு அன்னையாகவும் இருந்தார், இருந்துகொண்டும் இருக்கிறார்.

"அன்பே தெய்வம்"

ஆடுதுறை திரு. S. கிருஷ்ணமூர்த்தி அய்யர், கும்பகோணம்

முத்துசாமி என்பவரே
முதன்மையாக நின்றவரே
சட்டநெறியில் நின்றவரே
கட்டம்யாவும் வென்றவரே
வறுமைப் பிணியில் வாடாமல்
அருமைவாழ்வு வாழ்ந்தவரே

மனைவியிருவரைக் கொண்டவரே
மக்கள் ஐவரை ஈன்றவரே
இறுதிவாழ்க்கை நடத்தவென்றே
இரேவதியில்போய் கலக்கவென்றே
ஏற்றயிடமிதென் றுணர்ந்தவரே
ஏத்தாப்பூர் வந் தமர்ந்தவரே
வசிட்டதீர்த்தக் கரையதனில்—பின்
வருவோர் காண அமர்ந்தவரே.

திரு. R. விஜயரங்கம், மன்னார்பாளையம் (சேலம்)

கோவை திரு. G. V. முத்துசாமி செட்டியார் சுவாமிகளை அடிமைக்கு ஸ்ரீலஸ்ரீ. பாலகவி சுவாமிகள் அவர்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தினர். அவர் சாந்த சீலர். தவ ஒழுக்கத்தில் தலைசிறந்து விளங்கினர். அடியார்களைக் கண்டாலும் கேட்டாலும் அகங்குழைவார். முதன்முதலில் 1953-54-ம் ஆண்டில் சேலத்தில் வைஸ்யா மாடர்ன் ஹோட்டலின் உரிமையாளர் திருவாளர் பஞ்சநாதம் செட்டியாருடைய அறையில் தன் குமாரத்தியுடன் இருந்த சமயம் இவரைச் சந்தித்து, நீண்ட நேரம் ஆண்டவர் பெருமைகளைப் பற்றிச் சம்பாஷிக்க வாய்ப்பு கிடைத்தது.

இவர் கோவையில் பேங்கில் நகை மதிப்பினராக இருந்த சமயம் இருமுறை அடிமை கோவைக்குச் சென்று இவர் இல்லத்தில் சந்தித்துள்ளது. இவர் விடியல் 3½ மணிக்கு எழுவார். அடிமையையும் கிணற்றருகு அழைத்துச் செல்வார். இருவரும் நீராடியபின் ஆண்டவர் பூஜையிலீடுபடுவார். பூஜை ஒவ்வொருவருடைய மனத்தையும் நெக்குருகச் செய்யும். 5 மணிக்குள் அவருடைய வீட்டுத்தாய் ஆண்டவருக்கு நைவேத்தியத்திற்காக பக்ஷணங்களைத் தயாரித்துக் கொண்டுவருவார்கள். பூஜையில் மங்கள ஹார்த்தி முடிந்தவுடன் சிறிது நேரம் அளவளாவியதும் அடிமைக்கு ஆகாரம் அளித்தவுடன் அலுவலகத்திற்கு 'லீவ்' விண்ணப்பத்தை அனுப்பிவிட்டு, பேரூருக்கு அடிமையை அழைத்துக்கொண்டு

சென்று அங்குள்ள கோயிலின் சிற்ப வேலைகளின் நுட்பங்களையும் அதன் விளக்கங்களையும் விளக்கினர். மாலை திரும்பினேம். வீட்டில் ஆகாரம் எடுத்துக் கொண்ட பின்னர் பேருந்து நிலையத்திற்கு வந்து சேலம் வரும் வண்டியில் ஏற்றியனுப்பினர். அடிமை சுகமாக வீடு வந்து சேர முடிந்தது.

அடிமைக்கு பூஜை செய்வதற்கென ஒரு மணிவாங்கி அளித்துள்ளார். இன்றும் பூஜையில் அம்மணியே உபயோகிக்கப்படுகிறது.

பிறகு பலமுறை இச்சுவாமிகளைச் சேலத்தில் சந்தித்து அளவளாவச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஒருமுறை மன்னர் பாளையத்தில் அடிமை தங்கியிருக்கும் இல்லத்திற்கு விஜயம் செய்திருந்தார். எச்சமயம் சந்தித்தாலும் ஆண்டவர் வகுத்தளித்துள்ள சட்ட அனுஷ்டான வைராக்யங்களைப் பற்றி ஆழ உரையாடுவார். அதற்கேற்ப சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னர் கோவையை விட்டு ஏத்தாப்பூர் அபிநவத்தில் குடியேறிய அவர், ஆண்டவர் சோதனையில் கடுமையாக்கப்பட்டார்.

எதிலும் எள்ளளவும் சட்ட அனுஷ்டானத்தில் பின் வாங்காமல் உறுதியுடன் இருந்தார். அங்கும் அடிமை அவரைச் சந்தித்து உரையாடியதுண்டு. கண்டால் கண்ணீர் மல்குவார். அது இன்றும் அடிமையின் கண்முன் தோற்றமாகிறது. அடியார்களைக் கண்டால் அகங்குழைவார் என்று முன்பே குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் பஜனையை மிக அழகாகவும், ஊக்கத்துடனும், மிக்க பக்தியுடனும் நடாத்துவார். பிறரையும் அவ்வாறே ஊக்குவிப்பார்.

அவர் ஒரு சமயம் அடிமையோடு உரையாடியபொழுது, தான் ஸ்ரீல்ஸ்ரீ பாலகவி சுவாமிகள் வைத்திருந்த ஸ்ரீ வழிகாட்டும் வான்பொருளைப் பெற்றுப் படித்தவுடன், தன் தந்தையாரிடம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வகுத்துள்ள சட்ட விபரங்களை எடுத்துரைத்து சட்ட அனுஷ்டானத்தில் ஈடுபட்டதாகவும், அன்றிலிருந்தே தன்னிடத்துப் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருத்தி வந்த ஒரு நோய்

சொல்லிக்கொள்ளாமல் உடனே மறைந்துவிட்டதையும் விளக்கினர். இவ்வியாதி எவ்வாறு மறைந்தது என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை என்பதையும், ஸ்ரீலஸ்ரீ பாலகவி சுவாமிகள் அவர்களைச் சாமான்ய மனிதராக எண்ணலாகாது என்பதையும் தன் கருத்தில் தோன்றிய விஷயங்களை அப்படியே விளக்கினர்.

அவர் ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னை அவர்களிடத்திலும் ஆழ்ந்த பற்றுடையவராகவும், பயபக்தி விஸ்வாஸம் நிறைந்தவராகவும் இருந்தார். சிலசமயம் அவருடன் அடிமையும் ஸ்ரீலஸ்ரீ அன்னை அவர்களைத் தரிசிக்கச் சென்றதுண்டு.

G. V. M. என்று சொல்லும்பொழுது ஜீவியம் என்ற பதம் ஞாபகத்திற்கு வருகிறது. ஜீவியம் என்பது வாழ்வு எனப்படுகிறது. நாம் ஆண்டவரை அடைவதுதான் வாழ்வு என்பதற்கேற்ப G. V. முத்மிசாமி செட்டியார் அவர்கள் கீழே விழுந்து பெருமளவு இரத்தம் வெளிவந்து மயக்கமுற்றிருந்த காலத்தும் மருத்துவரைத் தன் சரீரத்தைத் தொடுவதற்கும் அனுமதியாமல், ஆண்டவன் நாமஸ்மரணையிலும் சட்ட ஒழுக்கத்திலும் இருந்து உடன் குணம் பெற்றுர் என்றால், அவருடைய பெயரின் சுருக்செழுத்துக்களும் அவர் வாழ்ந்த வாழ்வும் நமக்கு எம்மட்டு ஆச்சர்யம் நிறைந்த வைராக்யத்தைக்கொடுக்கிறது என்பதைச் சொல்ல அளவேது?

பிள்ளையார் குப்பம் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை அவர்களைத் திரு. G. V. M. அவர்கள் பலமுறை நேரில் சென்று அருள் நாட்டத்துடன் தரிசித்து அருள் பெற்று வந்திருந்தாலும், வண்டியில் ஏறிச்சென்று தரிசிக்க முடியாதிருந்த இச்சமயத்தில் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை அவர்கள் அடிமைக்குக் காட்சி கொடுக்க வந்திருந்த சமயம், ஏத்தாப்பூர் சென்று இவருக்குத் தரிசனம் கொடுத்து அருள் பாலித்ததும், அண்மையில் காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீலஸ்ரீ அருள் ஞானச் செல்வத்தாய் அவர்களும் ஏத்தாப்பூர் சென்று இவருக்குத் தரிசனம் கொடுத்து அருள் பாலித்ததும் இவருடைய தவத்தின் மேன்மையை விளக்குகிறது.

திரு. G. V. M. அவர்கள் ஆண்டவரின் சட்ட அனுஷ்டானத்தில் மிகுந்த பக்தி வைராக்யத்துடனிருந்து, ஆண்டவரின் உயர்திருவடியை 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் நாள் பகல் 1 மணி அளவில் சேர்ந்தார் என்பதை உணரும் அடியார்கள் ஒவ்வொருவரும் சட்ட அனுஷ்டானத்தின் நிலைக்கு அவர் ஒரு சிறந்த வழிகாட்டி என்பதை மறக்கவே முடியாது.

அவருடன் பழகியதில் அடிமை கண்ட அருமையான விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருப்பினும் விரிவாகும் என்றஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறது.

திரு. P. B. ராமலிங்கம், கோவை

திரு. G. V. முத்துசாமி செட்டியார் எனக்கு மிகவும் ஆத்மார்த்தமான குடும்ப நண்பர். தந்தையாரைப்போல் அன்புகாட்டி வந்தவர். தாராளமான நற்சிந்தையும், நியமம், நிஷ்டை, பக்தி, தேவதா விஸ்வாஸம், தர்மம் தவறுத உள்ளம், சொன்ன சொல்லைக் காக்கும் சீரிய குணம் முதலியவற்றை உடையவராகத் திகழ்ந்தார்.

இவர் சில காலம் ஷராப் வியாபாரமும், ஒரு சில காலம் ஷாப் வியாபாரமும் சொல்ப அளவில் என்னுடன் கூட்டாகச் செய்தார். சிலகாலம் நெய் வியாபாரம் செய்தார். அச் சமயங்களில் அவரது நேரிய நடத்தையும், வியாபார சாதுர்யமும், நண்பர்களுக்கு உதவும் பண்பும், நன்கு பிரகாசித்தன.

அவர் மிகுந்த சாந்த குணமும், உயிர்களிடத்தில் ஜீவ இரக்கம் கொண்டொழுகும் தன்மையும், நண்பர்களுக்குத் தராளமாக உதவும் குணமும் கொண்டவர். உதவி செய்யுங்கால் தனது சக்தியையும் மீறிச் செய்வார். ஒருவருக்கு உதவுவதில் வாக்குத் தந்தால், அதை நிறைவேற்றுவதில், எத்துணை இடர்வரினும், தளர்வுறுமல் குறித்த காலத்திற்கு முன்னரே நிறைவேற்றுவார். தெய்வ பக்தி

@ This Gentleman gave BREAKFAST & 250/- for SRSIP MALAR.

நிறைந்தவர். ஆலய வழிபாட்டிலும், கதாகாலக்ஷேபங்களிலும் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தவர். அவருடன் நான் 35 வருஷ காலமாக நட்பு கொண்டிருக்கிறேன். இரவு படுக்கைக்குச் செல்லும் நேரம் தவிர, மற்ற எல்லா நேரங்களிலும் இவரும், யானும், மற்றொரு ஆப்த நண்பர் @ திரு E. S. ராதாகிருஷ்ண செட்டியாரும் ஆக மூவரும் இணைபிரியாது இருப்போம். வெளியூர் செல்வதானாலும், மூவராகத்தான் செல்வோம்.

அவருடைய நற்குணத்தாலும், நண்பர்களுக்கு உதவும் நன்மனத்தாலும் தெய்வ, ஆலய, மத சம்ப்ரதாயநன்னடைத்தையாலும், எனக்கு அவ்வப்போது ஏற்படும் குடும்ப சம்பந்தமான சிக்கல்களுக்குச் சமயத்தில் தேறுதல் சொல்லும் நல்லாசானாகவும் சிறந்து விளங்கினார். அவருடைய பிரிவுச் செய்தி கிடைத்தவுடன் மிகமிக அதிர்ச்சியும், தாங்கொணாத மனக்கிலேசமும் அடைந்தேன். அன்னாரின் இடத்தை யாராலும், எந்த சக்தியாலும் நிரம்பச் செய்ய இயலாது.

இறைவன் அவருக்குப் பரிபூர்ண சாந்தியையும், அவரது குடும்பத்தினர்க்கு மன அமைதியையும் தரவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. E. S. ராதாகிருஷ்ண செட்டியார், கோவை

திரு. C. V. முத்துசாமி செட்டியார் என் சிறந்த நண்பர். அவருடன் எனக்கு ஏறத்தாழ 40 வருஷங்களாகத் தொடர்பு உண்டு. அவர் பழகுவதற்கு இனிமையும், குழந்தையைப் போன்ற வெள்ளை மனமும் உடையவர். தருமம் செய்வதில் நாட்டம் கொண்டவர். அதையும் விருப்பமுடன் தனது சக்திக்கு மீறியும் செய்பவர். திடசித்தம், வாய்மை, வாக்குத்தந்து அதன்படி நடப்பதில் உறுதி, பெற்றோர்கள், ஆன்றோர்களிடம் பக்தி, சிரத்தை, தெய்வபக்தி, ஆலய வழிபாடு, க்ஷேத்ராடனம், கதா காலக்ஷேபங்களில் ஆழ்ந்த

சிரத்தை, நன்னடத்தை ஆகிய உயர்ந்த நற்குண நற்செயல்கள் உடையவர்.

நண்பர்களுக்காகவும், தன்னிடம் பற்றுக்கொண்டவர்களுக்காகவும் எவ்வித இடர்களேயும் ஏற்று, அவர்களுக்கு உதவி புரிவதில் விருப்பம் கொண்டவர். உதவுவதில் தாராள மனப்பான்மை உடையவர்.

சில வருஷங்களுக்கு முன்னர் கோயம்புத்தூர் ஆர்ய வைஸ்ய மகாஜனங்களால் நடத்தப்பெற்று வந்த பள்ளிக்கூடம், பொருளாதாரத் துறையில் சிரம திசையில் இருந்தது. உள்ளூர் ஆர்ய வைஸ்ய மகா ஜனங்கள் சபை கூடி, தம் தம்மால் இயன்ற உதவிகளேச் செய்யலாயினர். திரு. G. V. M அவர்கள் ஆண்டுதோறும் தமது ஒரு மாத வருவாயை, அப் பள்ளிச் செலவுகளுக்குத் தருவதாகச் சொன்னர். பல ஆண்டுகள் தொடர்ந்து அதைத் தந்துவந்தார். மேற்படி பள்ளிக்கு அரசினர் கிராண்டு கிடைத்து, பொருளாதார சிரமநிலே நீங்கும்வரை இவ்வுதவி தொடர்ந்தது.

சிறிது காலம் கோவை ஜெயில் ரோடில் பலசரக்கு வியாபாரமும் நடத்திவந்தார். யாது காரணம்பற்றியோ, சில வருஷங்களில் அது தொடர்ந்து நடைபெறவில்லே. சில காலம் ஷராப் வியாபாரத்திலும் அவருக்கு அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவமே பின்னுளில் கோவை ஸ்ரீநிவாசஸப் பெருமாள் பாங்கிலும், பின்னர் கோவை பாக்யலக்ஷ்மி பாங்கிலும் மதிப்பினராகப் பணிபுரிய வாய்ப்பளித்தது. பணிபுரிந்த நாட்களில் இவருடைய சீரிய நற்குணங்களும், பின்னர் ஏற்ற அருட் சட்ட அநுட்டானமும், மிக உறுதியான தெய்வ நம்பிக்கையும் உடன் பணிபுரிந்த சக ஊழியர்களுக்கு முதலில் வியப்பையும், பிறகு மரியாதையையும் ஏற்படுத்தின. பாங்கின் மானஜிங் டைரெக்டர் முதல் எல்லோருமே அவருடைய நலன்களேப் பற்றி அடிக்கடி ஆழ்ந்த அன்புடன் என்னேக் கேட்பார்கள்.

இவர் தன் மக்களே அன்புடனும் தயையுடனும் வளர்த்தனர். நற்புத்திமதிகள் கூறி அரவணேத்தும் கண்டிக்க

வேண்டிய சமயங்களில் கண்டித்தும் நன்முறையில் பேணிவந்தனர். ஆதலால் இன்றும் அம்மக்கள் அனைவரும் தெய்வ நம்பிக்கை, உண்மையன்பு, இரக்கம், ஈகை முதலிய நற்பண்புடன் தந்தை வழியில் சிறந்து விளங்குகின்றனர். தெய்வ அருள் அவர்களுக்குப் பூரணமாக இருந்துவருகிறது.

திரு. G. V. M. அவாகள் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமி களின் அருட்சட்டம் ஏற்று விடியல் நீராட்டம், நித்ய பூஜை, நிஷ்டை சாதனம், மருந்து அருந்தாமை, அருள் நினைந்து உருகல், இயற்கையோடியைந்த வாழ்க்கை, மனதாலும் பிற உயிர்கட்குத் தீங்கு விளைக்காமை முதலிய சிறந்த முறைகளைத் தீவிரமாகக் கையாண்டார். அருட் சட்டம் ஏற்கு முன்னரே இவைகளில் பெரும்பாலான அம்சங்கள் அவர் வாழ்வில் இடம் பெற்றிந்தன. அதனால் அவர் அருட்சட்டம் ஏற்றதும் முன்னிலும் தீவிரமாக அனைத்தையும் கடைப்பிடிக்க முடிந்தது. எத்தகைய சூழ்நிலையிலும் காலந்தவறாது அனைத்தையும் நடத்துவார். நண்பர்களின் கவனத்தை ஈர்த்தவற்றில் இதுவும் ஒன்றாகும்.

தம் கடமைகளையும், பொறுப்புகளையும் காலம் தாழ்த்தாது, உரிய காலத்தில் செவ்வனே செய்து முடிப்பார். காலம் தாழ்த்திக் கடமைகள் செயவது அவர்க்குப் பிடிக்காது. பொதுவாகக் கடன் யாரிடமும் வாங்கமாட்டார். சந்தர்ப்பவசமாக வாங்க நேரிட்டாலும் குறித்த காலத்தில் அடைத்துவிடுவார். யார் வந்து கேட்பினும் இல்லையென்னாது அறம் செய்வார். அவரிடம் உதவிநாடி வருவோர் யாரும் வெறுங்கையுடன் செல்லார். அருட்சட்டத்தைக் கையாண்டும் இயன்றவரை அக்கொள்கைகளைப் பரப்பிக்கொண்டும் வந்தார்.

கபடு, சூது, சமயத்துக்கேற்ற பேச்சு முதலியவற்றை அறவே வெறுத்தார். தெய்வ காரியங்களில் மிகவும் ஈடுபடுவார். எங்களையும் அதில் கலந்துகொள்ளச்செய்வார்.

அவர் குடும்ப காரணங்களால் ஏத்தாப்பூரில் குடியேற நேர்ந்தபோது அவர் பிரிவை தாங்க எங்களால் இயலவில்லை.

பிறகு இரண்டொருமுறை சந்தித்தபோதும் பிரிவினுல் ஏற்பட்ட துன்பம் அதிகரித்தது. நட்புக்கும் சீரிய வாழ்க்கைக்கும் நல்லுதாரணமாகத் திகழ்ந்த அவர் மறைந்த செய்தி அறிந்ததும் யான் அடைந்த கலக்கத்திற்கு அளவே இல்லை. அவருடைய ஆத்மா சாந்தி அடையவும், அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தினர் ஆறுதல்பெற்று நல்வாழ்வு வாழ்ந்து விளங்கவும் எனது மனப்பூர்வமான பிரார்த்தனை.

"பண்பட்ட ஆத்மா"

(திரு. M. கண்ணன், தென்பிராந்திய ரயில்வே, நெய்வேலி)

"வேலை செய்யத்தான் வந்தேன்.வேலை வாங்கவரவில்லை" என்ற என் கூற்றுக்கு, "சுவாமி! அவ்வாறு கூருதீர்கள். நாம் அனைவருமே ஆண்டவன் பணி செய்யப் பிறந்தவர்கள் நமக்குள் வேற்றுமையா?" என்று விடையிறுத்தார். இன்று கூறியது போல் உள்ளது. ஆனல் நடந்ததோ சுமார் முப்பது ஆண்டுகட்கு முன். ஆம், திரு. G. V. M. அவர்களைச் சுமார் முப்பது ஆண்டுகளாக அறிவேன். அவர் பங்கு பெற்றிருந்த "பாஸ்கரா பப்ளிசிடி" என்ற அலுவலகத்தில் பணி புரிய சுமார் முப்பது ஆண்டுகட்கு முன், முதன் முறையாகக் கோவைக்குச் சென்று அவர் இல்லில் தங்கிய முதல் நாளில் அவர் எனக்குச் செய்த உதவிகள் என்னை மிகவும் நெகிழ வைத்து விட்டன. அன்று நிகழ்ந்த உரையாடலே துவக்கத்தில் கூறப்பட்ட ஒன்ருகும்.

அவர் நற்குடிப் பிறப்பாளர்: எளிய தோற்றமும் இரக்கமும் உடையவர்; நெறியாளர்: ஆண்டவர் பக்திமிக்கவர்.

திரு. இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஊனக் கண்ணுக்குப் புலனுகி உலவி அருளிய காலத்து, ஆன்மாக்களை ஆண்டு அருளி வந்தது போலவே, அவர் அருட்காப்பு இட்டுக் கொண்ட பிறகும், பண்பட்ட ஆன்மாக்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் அருளாட்சி செய்து வருகிருர் என்பது அடியவர்களின் திடமான நம்பிக்கை.

கோவையில் வாழ்ந்த திரு. G. V. M. அவர்களைச் சட்டத்தில் ஈர்த்தது சுவாமிகளின் அருள் நோக்கே ஆகும். சட்டத்தில் ஈர்க்கப்பட்ட G. V. M. அவர்கள் மிக மிக நெறியோடு சட்ட நெறிகளை அனுஷ்டித்து வந்தார். மற்றவர்களையும், சட்டத்தில் சேர்ந்து பயன்பெற ஊக்குவித்தார். அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய செயல் வீரர் அவர்.

தமது கடைசி காலத்தில், உடல் நலக் குறைவாக இருந்த போதும் கூட, ஆண்டவர்பால் உறுதி பூண்டு அவர்தம் அருளை எண்ணி இருந்தாரே யல்லாமல், சட்டத்திற்குப் புறம்பாக நடக்க மறுத்து விட்டார்.

திரு. பாலகவி அவர்கள் தம் பாடலில்
"முத்து சாமிக் கருள் மோனீ நமோ நம" — என்றும்,

"தேசுமிகு கோவை நகரில் — அன்புடன்
திகழ்முத்து சாமி பிணியை
மாசிலா தகல வோட்டி — அவரில்லில்
மாண்புற அமர்ந்த மணியே" — என்றும்

பாடியிருப்பதிலிருந்து இவர்தம் பெருமை நமக்குப் புலனாகிறது. ஆண்டவர் அருளாலே கடைக்கணிக்கப் பெற்ற ஆன்மா ஆதலின், பண்பட்ட ஆத்மா என்பதில் ஐயமுண்டோ?

"திரு. G. V. M. வாழ்க்கையில் நாம் அறியும் பேறு"

(திரு. S. S. சென்றாயனார், நெய்வேலி)

திருவாளர் முத்துசாமி செட்டியார் அவர்களை எனக்கு சுமார் 20 ஆண்டுகளாகத் தெரியும். இவருடைய வாழ்க்கை, ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அடியார்களுக்கும், திருவருளை நாடும் முயற்சியில் ஈடுபட்டு வரும் அன்பர்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. அடியார்களுக்கு மிகவும் பயன்படும் என்ற கருத்தில் இதை எழுத முற்படுகிறேன்.

இவர் தகப்பனுர் படித்த மேதையாக வாழ்ந்தவர்: சுயநலம் சற்றும் இல்லாமல் மிக அடக்கமாய் கல்விச் செருக்கற்றவராய் வாழ்ந்தவர். அவரைப் போலவே இவரும் மிக எளிய நடையும், தூய வாழ்க்கையும் மேற்கொண்டு, எல்லோரிடமும் அன்பு நிறைந்தவராய் வாழ்ந்து வந்தார்.

இவர் முதல் முதலில் குருநாதரால் ஆட்கொள்ளப் பெற்ற விதமே அற்புதமானது. சட்டம் எடுப்பதற்கு முன் இவர் ஆஸ்த்மா வியாதியால் மிகவும் கஷ்டப்பட்டார். தான் பணியாற்றி வந்த வங்கியில் பல முறை எழுந்து சென்று பிராணுயாமம் செய்து கொண்டு வந்து பணியாற்றுவார். இவ்வாறு இருக்கும் பொழுது, இவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளைப் பற்றியும், அவருடைய அருட் சட்ட நெறியைப் யற்றியும் ஒரு நண்பர் மூலமாய் அறிந்து, அந் நெறியில் ஈடுபடுவதெனத் தீர்மானம் செய்து கொண்ட உடனேயே அக்கடு நோயிலிருந்து விடுதலை பெற்றவர். மறுநாள் அதிகாலை தண்ணீரில் மூழ்கி, முன்னவனுரையும் குரு பெருமானையும் பூசித்து, வங்கி சேர்ந்து பணியாற்றுகையில் தாம் நோயினின்றும் விடுதலை யடைந்துள்ளதை யுணர்ந்து வியப்புற்ருர். இவர் சிறந்த மெய் அன்பர் என்று, குருநாதர் இவர் குறையை நீக்கி ஆண்டு கொண்டார் போலும்! சட்டம் மேற்கொள்ளக் கருதிய உடனேயே அருள்பாலிப்புப் பெற்றவர் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இது அடியேனுக்கு அவரே கூறிய நிகழ்ச்சியாகும். இவர் வாழ உணவு கொண்டவர், உண்பதற்காக வாழ்ந்தவர் அல்ல என்பது நன்கு தெரிகிறது. மேலும் 'தடிப்புறும் ஊண் சுவையடக்கி' என்று வள்ளலார் கூறியதற்கிணங்க வாழ்ந்தவர் என்பது புலப்படுகிறது. அடியார்களுக்கு வேண்டிய இக்கடினமான 'சுவையடக்கமாகிய நாவடக்கம்' உடையவர் என்பது புலனுகிறது.

உடல்பற்றும் அற்றவராய், 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அப்பர் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர். பாம்பு, தேள் முதலிய கொடிய விஷ ஜந்துக்களைக்

கண்டபோது சற்றும் உயிருக்கு அஞ்சாமல் 'குருநாதா! குருநாதா, எங்கே போகிருய்?' என்று கூறி அதனிடம் சென்று கையை நீட்டுவார். பாம்பும் ஒன்றும் செய்யாமல் இவர் கைமேல் ஏறிக் கொள்ளும். அதை இவர் ஊருக்கு வெளியே எடுத்துச் சென்று விட்டுவிட்டு வந்து விடுவார். குருநாதர் எங்கும் இருக்கிருர் என்ற திட நம்பிக்கை உடையவராய்த் திகழ்ந்தார் என்பது தெளிவு.

இவர் ஓய்வு பெற்ற காலத்தில் ஏத்தாப்பூரில் வாழ்ந்த போது நிகழ்ந்த இரு சோதனைகளில் இவர் வெற்றி பெற்றதை இவருடைய மைத்துனர் திரு. K. பஞ்சநாதம் செட்டியார் கூறியதைக் குறிப்பிடுகிறேன். ஒரு சமயம் இவர் கீழே விழுந்தபோது ஒரு காது அறுந்து, அறுந்தபாகம் தொங்கிக்கொண்டிருந்தது. இதற்கு அவர் எந்த மருத்துவ ரிடமும் செல்லாமல், அமைதியாக 'விட்டவாறு உடையவன் செயல்' என்று இருந்தார். மூன்ரும் நாள் அவருடைய திருக்குமாரத்தி திருமதி. பாரதா அம்மையார் அவர்கள் சேலத்திலிருந்து சென்றவர் தொங்கிய காதுபாகத்தைப் பழையபடி பொருத்திவைத்து விபூதி இட்டுக் கட்டுப் போட்டனர். இவரும் குருநாதரிடம் உறுதியான நம்பிக்கை உடைய உண்மையான அடியவராவார். சிலதினங்களில் காது பழையபடி ஒட்டிக்கொண்டு பூர்ண குணம் அடைந்தது.

அடுத்து ஒரு நாள் சிறிய கூழாங்கல் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு படுத்திருந்தபோது எப்படியோ அக்கல் தொண்டைக்குள் சென்று, வயிற்றுக்குள் செல்லாமலும், வெளியில் வராமலும் அவருக்கு மிகவும் துன்பத்தைக் கொடுத்தது. உணவு அருந்த முடியாமல், மூச்சுவிடவும் முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இந்நிலையிலும் குருநாதரையே நினைத்துக்கொண்டு 'அவர் திருவடியே கதி' என்று இருந்தார். மருத்துவர் உதவியை நாட உறவின ரையும் அனுமதிக்கவில்லை. வருவது வந்தேதீரும். நடப்பது நடக்கட்டும். அனுபவிக்க வேண்டியதை இந்தப் பிறவிலேயே அனுபவித்துவிட வேண்டும் என்று திடசித்தமுடன் இருந்தார்.

'நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது, ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம்' என்று அபிராமி அந்தாதி அறைவதற்கிணங்கவும், "இன்றோர் இடையூறு எனக்குண்டோ? எண்டோள் முக்கண் எம்மானே! நன்றே செய்வாய், பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே?" என்று மாணிக்கவாசகப் பெருமான் காட்டியஉறுதியோடும் கீதையில் கூறியுள்ளது போல பரிபூர்ண சரணாகதி குருநாதரிடம் ஒப்புக் கொடுத்தும் இருந்தார். இரண்டாம் நாளே ஒரு சிறிய தும்மல்வர அந்தச் சிறிய கூழாங்கல், தானே தொண்டையிலிருந்து வெளிவந்து விட்டது. பிறகு பூர்ண குணமடைந்தார்.

நம்மோடு வாழ்ந்த இவர் தம் வாழ்க்கையில் காட்டியபடி நாமும் செந்நெறியை உறுதியோடு பேண வேண்டும்; குருநாதரைச் சிக்கெனப் பிடிக்க வேண்டும். மனம் தளராமல் அவரையே நாடி இருக்க வேண்டும். புலனடக்கமும் மெய்யன்பும் தூய வாழ்க்கையும் கடைப்பிடிக்க வேண்டும். பற்றற்று அவர் அருளையே நாடியிருப்போமாயின், இவர் திருநாமம் குருநாதரின் அஷ்டோத்திர சதநாமத்தில் இடம் பெற்றதுபோல், நாமும் வாழ்வாங்கு வாழும்பேறு பெற்றுய்வோம் என்பதில் ஐயமில்லை.

வாழ்க குருநாதர் நாமம்!

வளர்க அடியார் தொண்டு!!

திரு. G. V. M. என் நண்பர்

(திரு. S. V. நாகசுப்ரமண்யம்—கோவை)

நண்பர் முத்துசாமியுடன் நீண்ட நாள் தொடர்பு உண்டு. முத்துசாமியின் தகப்பனார் பண்டித G. வேங்கடகோபால செட்டியார் அக்காலத்தில் ஆங்கிலக் கல்வி கற்றதுடன், தமிழ், தெலுங்கு, இந்தி, மராட்டி, சமஸ்

கிருதம் மற்றும் பல பாஷைகள் கற்றதுடன் நில்லாமல், சமஸ்கிருத பண்டிதராகவும், சமஸ்கிருதத்தில் ஸ்லோகம், வசனம் இவற்றில் மிக நன்கு தேர்ச்சி பெற்றும் விளங்கினர். கோவை ஜில்லா கோர்ட்டிலும், நீலகிரி ஜில்லாவிலும், தமிழ் முதலிய பிற மொழிகளில் பேசுகிறவர்களின் பேச்சை ஆங்கிலேய நீதிபதிகளுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்குபவராக (Translator) இருந்து வந்தார். அப்படி இருக்கையில் பல ஆங்கிலேய, இந்து, முகமதிய நீதிபதிகளின் பாராட்டுதலைப் பெற்றூர்.

ஆர்ய வைஸ்ய மகாசபை குண்டூரில் நடந்தபோது, அதன் தலைவராக இருந்து ஆற்றிய தலைமையுரை முக்காலும் போற்றுதற்குரியது. அவர் நம் சமூகம் நல்ல நிலைமையில் முன்னேற்றம் அடைய வேண்டும்; சமூக வாலிபர்கள் நல்ல கல்வி கற்க வேண்டும் என சதா தியானித்துக்கொண்டும், நம் சமூக சிறுவர்களுக்கு சம்ஸ்கிருதம் போதித்துக் கொண்டும் தொண்டாற்றியவர். அவருக்கு மூன்று பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் உண்டு நான்காவது குழந்தை G. V. முத்துசாமி ஆவர்.

G. V. முத்துசாமியுடன் எனக்குச் சிறுவயதில் விளையாடிக் கொண்டிருந்தபோதும், பள்ளியில் வாசிக்கின்ற போதும், ஆர்ய வைஸ்ய மகாசபை கோவையில் நடந்த போதும், ஆர்ய வைஸ்ய சமாஜம் ஏற்படுத்திய போதும், கால்பந்து குழு நடத்தியபோதும், தேகப்பயிற்சி சபை ஏற்படுத்தியபோதும், டென்னிஸ் பந்தாட்டம் ஆரம்பித்தபோதும், மாநாட்டில் நாடகம் நடத்தியபோதும் தொடர்புண்டு.

நல்ல காரியம் எதைச் செய்தாலும், அதில் முழுப் பொறுப்பு ஏற்று ஓயாமல் சேவை செய்து வந்தார். அவர் சிறிது காலம் பாஸ்கரா பப்ளிசிடி என்ற விளம்பரக் கம்பெனியில் பாகஸ்தராகவும், பாக்ய லக்ஷ்மி பேங்கில் நகை மதிப்பினராகவும் இருந்து வந்தார்.

அவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளின் சிஷ்யராகவும், சட்டத்தில் அங்கத்தினராகவும், ஸ்வாமிகளிடம் மிகுந்த பற்றுதல் கொண்டும் திகழ்ந்தார். நல்ல மனம், சாதுகுணம், பிறர் மனம் நோகா நடத்தை,. தன் தந்தையாரைப்போலவே சமூக முன்னேற்றத்தில் அக்கரை முதலிய நற்குணங்களைக் கொண்டிலங்கினர்.

அவர் கோவையில் உள்ளவரையில் தினம் தவறுமல் சந்தித்து, இராஜிய, சமூக, வியாபார விஷயங்கள் பேசுவோம். அவர் கோவையை விட்டு விலகிய பின்பும் அடிக்கடி கடிதம் எழுதுவார்.

அவர் விட்டுச்சென்ற அவருடைய மக்கள் எல்லா நலனும் அடையவும், அவர் ஆத்மா சாந்தி அடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ வாசவ கன்னிகா பரமேஸ்வரியைப் ப்ரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என் உயிரைக் காத்த உத்தமர்

உயர் திரு. அப்பர் — ஏத்தாப்பூர் (அபிநவம்)

யான் சிறு வயதினனுக இருக்கையிலேயே உயர்திரு. G. V. M. அவர்களை அறிவேன். அவர் பரிவும் பண்பும். உள்ளவர். ஆனல் அவர் ஆண்டவர் சட்டத்தில் இருப்பவர் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

எனக்கு நெஞ்சுவலி வந்து, சுமார் ஒரு வருடம் மூன்று மாத காலத்திற்குள் சுமார் 10 டாக்டர்களிடம் காட்டியும் நீங்க வில்லை. டாக்டர்கள் கைவிட்ட பின்பு எமன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் 19-6-1961 புதன் கிழமை யன்று திரு. G. V. M. அவர்கள் அபிநவம் வந்திருந்தார். என் உடம்பைப் பார்த்ததும் 'டாக்டரிடம் காட்டுவது தானே' என்ருர். டாக்டரிடம் காட்டியும் நோய்

தீரவில்லை' என்றேன். சிறிது நேரம் யோசனை செய்து, குருநாதர் சட்டத்தை விளக்கிக் கூறி அதை அனுஷ்டிக்கச் சொன்னார். அப்போது சுமார் நூறு ரூபாய் பொறுமான மருந்துகள் கைவசம் இருந்தன. அவற்றை வீணாக்காமல் சாப்பிட்டு விடுகின்றேன் எனக் கூறினேன். "மருந்தின் பேரில் இருக்கும் நம்பிக்கை இறைவன் பேரில் இல்லையே" என்றார். நான் மருந்து சாப்பிடாமல் அன்றே சட்டத்தை ஏற்றுக் கொண்டேன். ஆண்டவர் என்னை ஏற்றுக் கொண்டார். வலி வந்த இடம் தெரியாமல் போய் விட்டது. குருநாதர் சட்டத்தைக் காட்டி என் உயிரைக் காத்த உத்தமர் அவர். அவரை என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்.

பிறகு சட்ட அடியவர்களிடம் என்னைப் பற்றி அறிமுகப் படுத்துவார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, கீழே விழுந்ததில் காது சிறிது அறுந்து விட்டது. "டாக்டரிடம் காட்டி காதைத் தைக்கலாம்" என்றேன். "முடியாது" என்று சொல்லி, 'திருநீறு மட்டும் வையுங்கள்' என்றார். வயதான காலத்தில் அது முடியுமா என்று நினைத்தேன். ஆனால் பத்து நாளில் சொல்லியது போல் காது ஒன்றாகக் கூடி விட்டது. அவர் குருநாதரின் திருவருள் பெற்றவர் அல்லவா?

குருநாதர் சட்டத்தில் திரு G. V. M. அவர்கள் பூர்ண நம்பிக்கை கொண்டிருந்தார். எத்தகைய நோய் வந்த காலத்தும், டாக்டரையோ, மருந்தையோ நாடாமல் முழு உறுதியுடன் இருந்து வந்தார். ஆண்டவர் திருவடி அடையும் வரை வெந்நீரையும் மருந்தையும் சிறிதும் விரும்பாமல், ஆண்டவர் திருவருளே அரும் பெருந்துணை யெனத் திட மனதுடன் வாழ்ந்து வந்தார்.

அருட்சட்ட அடியவர்களைக் கண்டால் மகிழ்வுடன் வரவேற்றுப் பூர்ண அன்புடன் உபசரிப்பார். விருந்தோம்பும் பண்பாட்டில் அவர் சிறிதும் சளைக்காமல் சிறந்து விளங்கினார். அதற்கேற்றவண்ணம் அவருக்குக் குடும்பமும் ஒத்து விளங்கியது இறைவன் திருவருளே யாகும்.

"நமது உடல் குருநாதருடையது; அதன் மேல் நாம் பாசம் கொள்ளக் கூடாது; அவருடைய உடல் ஆதலால அதை அவர் எது வேண்டுமானுலும் செய்து கொள்ளட்டும்: இறைவனிடம் ஒப்புவித்த பின், அதன் மேல் நாம் கவலைப் படல் கூடாது'' என்பார்.

கடைசிக் காலத்தில் உயிர் அடங்கப் போகும் தருணத் தில் அவர் என்னை அழைத்து வரும்படிக் கூறினுர். நான் வத்து பார்ப்பதற்குள் அவர் நினைவு இருந்தும், பேசும் சக்தி அற்றவராகி விட்டார். கடைசி வார்த்தையாக என் பெயரைக் கூறி எந்த நம்பிக்கை என்மேல் வைத்திருந் தாரோ, அந்த நம்பிக்கைக்கு நல்லவனுக நடந்து, அவர் குடும்பம் விளங்க என்னுல் முடிந்த அளவு உதவியாற்றி வருவதாக அவருக்கு வாக்கு அளித்தேன். அந்த நம்பிக் கைக்கு விரோதமாக இருக்க மாட்டேன். ஏன் என்ருல் என் உயிரைக் காத்த உத்தமர் அவர்.

அவருடைய விருப்பப்படி நடந்து, உடல் உபாதை நீங்கப் பெற்று, திருமணம் செய்து கொண்டு குழந்தையுடன் சௌகரியமாக உள்ளேன்.

Om.

A Glimpse of the Past

(Sri. R. Ramalingam B.A., Coimbatore)

God is great. Sometimes an opportunity occurs i tself when we are made to think of the past—men and euents. It is then that we begin to realise the truth of the proverbial saying that 'Old is gold'. The impact of modern science on the human mind is so powerful that the soul gets itself immersed and perhaps lost in the ephemeral enjoyment of its findings and revelations of convenience and utility in the material sphere. Man craves for more and more of material comforts by all means at his disposal. When a conflict occurs between self enjoyment

and righteousness, he is daring enough to reject the latter, at times, even Knowingly. Dharma is thus discarded and he recedes far and farther from the goal of life. A moment of thought about the lives and teachings of our ancestors is enough to bring us back to the pathof Virtue.

The god-fearing and simple life of Shri Grandhi Venkatagopala Arya, father of Shri G. V. Muthuswamy Chettiar, is a shining example of recent times for any one to emulate. A scholar, well versed in several languages—Sanskrit, Telugu, Malayalam, Canarese, Tamil Urdu, Latin, Hindi, Burmese and English—he endeared himself to the community at large and earned the titles theof '**Ubaya Basha Praveena and Pundit**' for his erudition in Telugu and Sanskrit. His only anxiety during his life time was that the Arya Vysya Community as a whole should uphold the vedic doctrines and follow the Sanatana Dharma as enshrined in the sashtras in their daily walk of life. He presided over several conferences and toured along with the veteral leader of the time, Shri Athmuri Lakshmi Narasimha Somayajulu. He had contributed several articles to Andhra magazines. His last and most cherished work was '**Sri Vasavi Vijayam**' in Tamil, sponsored and veleased at Palni in 1944 by the Dakshina Kanda Arya Vysya Mahasabha of which Vysya Bhushanam—Shri P. A. Raju Chettiar was the founder President. Shri M. V. Gopal Shrestigaru, a foremost desciple of Shri Venkatagopala Arya and Balakavi, Shri M. K. Venkataraman ably assisted him in this laudable work.

About this time, I resigned my job in Government Office at Madras to take to private business at Coimbatore.

My father, Shri. V. G. Ramanatham Chettiar and Shri Grandhi Venkatagopala Arya were bosom friends. Both were astrologers of rare distinction. Though this was not their profession, the whole community used to consult either of them on and often. My inclination towards Sanskrit, which was my Second language. Upto B. A., was a binding factor and I could have the fortune of continving my Sanskrit studies at his feet during his last days for a few months only. During this period my association with Shri G. V. Muthuswamy Chettiar and Shri M. K. Venkataraman developed into mutal affilinity. A small business enterprise Known as Bhaskara Publicity was started by us at the behest of Shri Rama Satagopan, editor of Thyagi, a Tamil monthly from Madras who was then writing 'Triveni Ramayana', The business association was indeed for a short period as the capital was not much and the profits were also mearge.

Shri M. K. Venkatraman later edited 'Swadarmam', a tamil magazine under the auspices of Dakshina Kanda Arya Vysya Mahasabha. His spiritual attitude and versatality in Tamil literature which he possessed from his early days brought him closer to philanthropic minded persons. The system and way of life prescribed by shri Reddiapatti Swamigal was much to his liking. He took up the chattam in all earnestness. All the members of his family joined him in pursuit of the new experience. Shri G. V. Muthuswamy Chettiar followed suit. He was regular in his pooja routine. Many relations and friends received 'Thirtham' and "Vibhuthi" prasadam at his hands. He regularly visited Reddiapatti many a time. His Courage

and conviction in observing the rules and regulations of the Chattam are well known to the devotees.

Before he left for Ethapur, for a long period, a group of us-Shri E. S. Radha Krishna Chettiar, Shri R. S. Krishna Chettiar, Shri Ramudu Chettiar, myself and a few others woke up in the early hours of the day at 4 A.M., proceeded to Perur, a Siva Kshetra four miles away from Coimbatore, by walk, took our purificatory bath, finished our morning worship at the temple and returned to our homes before 8 A.M. to attend to our normal duties.

The ways of God are always wonderful and beyond our intellect and imagination. I did not have any contract with Shri G. V. Muthuswamy chettiar after he left for Ethapur but could only make enquiries whenever any of our friends visited that village. He has now left us for his celestial abode and one fact is clear that for those who repose confidence and complete faith in the Alrmighty, He receives them with all Kindness.

ஓம்

திரு. G. V. முத்துசாமி செட்டியார் அவர்கள் பூசித்துக் கொண்டிருந்த விநாயகரைத் தரிசித்த சென்னை 'அருட்கவி' திரு. S. V. சேதுராமன் அவர்கள் பாடித் துதித்த

அருட் பாடல்கள்

கணபதி துணை குருநாதர் துணை வேலும் மயிலும் துணை

ராகம் : பூரிகல்யாணி] 27-3-55 (கோவை) [தாளம் : ஆதி

தனன தனத்தன தனதான

நியம விதிப்படி சிவபூஜை—
நெறியி னிகழ்த்திடி னொருநாளும் ;
இயம ன்வர்க்கடை யணுகானென்
றிதனை யுணர்த்துமு னருளேதோ;

நயம தளித்தருள் நமர்நாதா—
நரகி லிடர்ப்படல் தவிர்போதா;
பயமில் வழித்துணை யொருநீயே—
பரவிய பத்தர்கள் பெருமாளே.

[நண்பர் திருப்பேரூர் திரு. மாணிக்க வாசகர் அவர்கள் இவர்களில்லத்தில் சிவபூஜை நிகழ்த்தி முடித்தவுடன் இப்பாடல் பாடப்பெற்றது.]

ராகம் : சாமா 16-5-55 (கோவை) தாளம் : ஆதி

தத்ததன தானத் தனதான
பத்துடைய சீலப் பணியாளர்—
பத்தர் பல ரோடுற் றடியேனை;
ஒத்துலவு மா (று) ஒற் றுமையாக—
ஒட்டியுற வாடச் செயலேதோ;
மத்துமலை யாளிக் கினியோனே—
மட்டொழுகு சாரற் கிரிவாழ்வே;
முத்துவடி வேலற் கணனுன—
முக்கணுடை ஞானப் பெருமாளே.

முருகன் துதி

ராகம் : சிந்துபைரவி] [தாளம் : ஆதி

தத்தத் தனனத் தனதான
பத்திக் குருமற் படுவேனைப்—
பற்றிற் குலாவிக் கெடுமாறே;
சித்திக் கவேவைத் திடலாகா—
தித்திக்க ஞானத் தமிழீவாய்;
சித்திக் கணேசர்க் கிளையானே—
செக்கர்க் குகேசப் பெருமானே;
முத்திப்ரபோதத் துறையோனே—
முத்துக் குமாரப் பெருமாளே.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

ஆண்டவரின் அருட்குறிப்பு

அடியவர்களின் ஆவல், ஆவனபுரிய வேண்டுகோள்.

அருட்பெருஞ் செல்வத்தை அள்ளி வழங்கும் குருபரனார் இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்குறிப்பு இருந்த வண்ணம், சென்னை ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகத்தின் மூன்றாவது ஆண்டுவிழா, தமிழக உயர்நீதி மன்ற நீதிபதி-மேதகு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் 1974-ல் நடைபெற்றபோது, இலக்கியப் பதிப்பக அமைப்பாளர் திரு. ஜெகந்நாத குப்தா அடிகளார் அவர்கள், சென்னை மாநகரில், நம் குருநாதரின் அருட் பாங்கினை அனைவரும் ஒன்றியிருந்து, அடைந்து அரும்பயன் பெறுவதற்கு வாய்ப்பாக ஓர் அருள்வள மாளிகை அமைக்க வேண்டியதன் இன்றியமையாமையை எடுத்து இயம்பினார்கள். கூடியிருந்த அடியவர்கள் எல்லோரும், மிகவும் போற்றி வரவேற்றார்கள்.

இதனையொட்டி, இலக்கியப் பதிப்பகத்தின் நான்காவது ஆண்டு விழாவும், பதிப்பகச் செயலாளர். திரு. ஜெ. குபேந்திரன் திருமணமும் இணைந்து, 1975-ல் நடந்த நேரத்தில், திரு. குப்தா அடிகளார் அவர்கள், அருள்வள மாளிகை அமைப்பதற்கு முன்னவனார் இன்னருளை முன் நிறுத்தி, ரூ. 1001- (ரூபாய் ஓர் ஆயிரத்து ஒன்று) 'வழி காட்டும் வான்பொருள்' நூலினை வரைந்தளித்த திரு கீ. இராமலிங்கனார் வழியாக வழங்கி, அறப்பெருஞ் செல்வர் திரு. வி. எம்பெருமானார் செட்டியார் அவர்களிடம் ஒப்படைக்கச் செய்தார்கள். திரு. செட்டியார் அவர்கள் இக் கட்டிட நிதிக்குப் பொருளாளராக அமர்ந்து, மேற்கொண்டு ஆவனசெய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்.

சென்னை மாநகரில், எல்லோரும் எளிதில் கூடுவதற்கு வசதியான ஓர் இடத்தில், ஆண்டவர் அருட்சட்ட நெறி

ஓங்கி வளர்வதற்கான வாய்ப்பு, வளங்களுடன், ஓர் அருள் மாளிகையை அமைப்பதற்குத் தகுதியான இடம், மாளிகை அமைய வேண்டிய முறை, தேவையான வழி வகைகள், பிறவற்றையும் பற்றி, ஆங்காங்குள்ள அடியவர்கள், அவரவர்கள் அருங்கருத்தையும், செயலாற்ற வேண்டிய வழி முறைகளேயும், திருவருள் கொண்டு சிந்தித்து, அறிவித்து உதவ வேண்டிக் கொள்கிறோம்

இங்ஙனம்
செயற்குழுவினர்
ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்
'அடியார்கள் இல்லம்,'
32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னே-1.
[தொ. பே. எண் : 34600]

பதிப்பக வெளியீடுகள்

			ரூ.	பை.
*1.	அருட்ப்ரஸாதம்	...	0	10
*2.	குருஅருள் திருவுந்தியார்	...	0	15
*3.	மதுரை ஸ்ரீ பரிபூர்ண விநாயகர் வரலாறு		0	50
*4.	பேரின்ப வேட்கை	...	0	50
*5.	குரு அருள் வேட்டல்	...	0	75
*6.	இருடியர்பட்டி குருநாதர் பிள்ளேத் தமிழ் மெல்லட்டைப் பிரதி	...	1	10
	வல்லட்டைப் பிரதி	...	1	60
	*(குரு அருட்கோவை ஆறு நூல்கள் சேர்ந்தது) பைண்டு புத்தகம்	...	5	00
7.	ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் 50-வது குருபூஜைப் பொன்விழா மலர்	...	5	00
8.	The Kindly Light that Leads (Life & Teachings of Swamiji)	...	1	00
9.	அருள்மணிப் பெட்டகம்	...	0	25

ஆண்டு சந்தா : ரூ. 6/- ஆயுள் சந்தா ரூ. 100/-
புரவலர் : ரூ. 1000/-

அருட்ப்ரஸாதம்

இப்பதிப்பகத்தின் நோக்கங்கள்

1. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் நெறியைப் பரப்புதல்.

2. சுவாமிகள் பற்றி இதுவரை வெளிவராத செய்திகளை வெளியிடுதல்.

3. ஆண்டவர் மீது அடியவர்கள், பாடும் புதிய கவிதைகளை அச்சிட்டு வழங்குதல்.

4. குருநாதர் அருளிய கொள்கைகளும் வாழ்க்கை வழிகளும் கொண்ட ஒரு மாதப் பத்திரிகை வெளியிடல்.

5. குருபரரின் அருட்சட்ட நெறிகளைப் பிற மொழியினரும் பிற நாட்டினரும், அறிந்து கைப்பற்றுவதற்கு ஆவன செய்தல்.

6. குறைந்தது மாதம் ஒரு முறை அடியவர்கள். அன்பர்கள் கூடி ஆண்டவர் அருட்பாடல்களைப் பாடி மகிழ்தல்

7. குருபரனின் வரலாறு, அருட்சட்டம் (வகுத்த வாழ்க்கை நெறி) குறித்த செய்திகளைப் பலரும் அறிய அவ்வப்போது கூட்டங்கள் அமைத்துப் பேசுதல்.

8. நாட்டின் பல பாகங்களிலுமுள்ள அடியவர் அன்பர்களை ஒன்று சேர்த்துச், சட்டச் சகோதர உணர்வைப் பெருக்குதல்.

9. ஆண்டவர் அருள் நெறியின் ஈடுபாட்டை வளர்ப்பதற்கு அடியவர்கள், அருள் நிகழ்ச்சிகள் பற்றிய ஒளிப் படங்கள், ஓவியங்கள் முதலியவற்றைத் திரட்டுதலும் வெளியிடுதலும்.

10. குரு பெருமானின் அருட்சட்ட நெறிக்கு அரண் செய்யும் பிறமகான்களின் வரலாறுகள், பாடல்கள் முதலியவற்றைப் பலரறியச் செய்தல்.

11. மேற்கண்ட நோக்கங்களை வளர்ப்பதற்கு உரிய மற்ற செயல்களைப் புரிதல்.

வாழ்க குரு அருள்! வளர்க வளமெலாம்!

Phone: 34600 Estd: 1971 Regd. 1973

Sri Reddiappatti Swamigal Ilakkia Pathippaham

32, Govindappa Naicken Street, Madras—1.

SUPER POWER PRESS MADRAS-1. PHONE : 24492